விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, வைகாசி 25உ (8-6-71) செவ்வாய் ற.ஆகிர் பிறை 14 புத்தகம் 25 இதழ் 29

'தமிழ் மொழியுரிமைகள் மறுக்கப்படின் ... !

# அரசியல் நிர்ணயசபையில் நெருக்கடி வெடிக்கலாம்!'

## தந்தை செல்வா அளித்த சிறப்புப் பேட்டி!

'அரசியல் நிர்ணய சபையில் தமிழ்மொழி உரிமை சம்பந்தமாக தமிழரசுக்கட்சி விடுத்திருக்கும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் நெருக்கடி நிலை ஒன்று வெடிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். தமிழரசு பா. உ.க்கள் சபையை பகிஷ்கரித்து வெளியேற வேண்டிய சூழ்நிலையும் இதனுல் தோன்றலாம்'—

—இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் சுதந்திரன் நிருபருக்கு அளித்த பிரத்தியேக பேட்டியொன்றின் போது உறுதியான குரலில் கூறினர்.

அவர் மேலும் இது பற்றிக் கூறியதாவது:—

"தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமாக ஐந்து முக்கிய கோரிக்கைகளை சில காலத்துக்குமுன் பிரதமரைச் சந்தித்தபோது சமர்ப்பித்திருக்கிறேம். இந்த ஐந்து கோரிக்கைகளும் சிறிது கூட விட்டுக் கொடுக்க முடியாதவை: தமிழினம் இந்நாட்டில் தமிழைப் பேசி, தமிழினமாக வாழ்வதற்கு அடிப்படையாக உள்ளவை. இந்த ஐந்து அம்சங்களும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிய அரசியல் சட்டத்தில் இடம் பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறேம்.

அரசியல் நிர்ணய சபையில் தமிழ்மொழி சம்பந்தப்பட்ட நமது திருத்தங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படுவதற்கு முன்பு, நமது ஐந்து அம்சமொழியுரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமாக மீண்டும் பிரதமருடன் பேசி அரசாங்கத்தின் இறுதி முடிவு என்ன என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேம்.

"அரசாங்கத்தின் முடிவு தெரிந்ததும், மேற்கொண்டு என்ன நடவடிக்கையிலீடுபடுவது என்பதை கட்சி முடிவு செய்யும்"

—இவ்வாறு செல்வா அவர்கள் தெரிவித்தார்.



## உள்ளே!

அரசியல் மடல் —பக்கம் 3
தமிழரசு பா. உ.வின் பொதுவுடமை முழக்கம்! —பக்கம் 4
குயுக்தியார் பதில்கள் —பக்கம் 5
நாடாளுமன்றத்தில் நவம் கூறிய விரியன் பாம்பு கதை. —பக்கம் 6
முரசொலி மாறனின் 'வங்கநாட்டு விடுதலை வரலாறு' —பக்கம் 7
சிறுகதை —பக்கம் 8
கருணாநிதி நெடுஞ்செழியன் கருத்துரைகள் —பக்கம் 9.
கவிஞர் சுரதாவின் 'எச்சில் இரவு' —பக்கம் 10

தமிழ் முகவரி பதிவு கடிதங்களுக்கு

## சிங்களப் பற்றுச்சீட்டு சட்டப்படி சரியானதாம்!

### துணை அமைச்சரின் பதில்!

"அரசாங்கத்தின் மொழிச் சட்டங்களுக்கு அமையவே அஞ்சல் அலுவலகங்களில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும் பதிவுக் கடிதங்களுக்கு பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே தமிழில் முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதங்களுக்கு தமிழில் பற்றுச்சீட்டு கொடுக்கும்படி உத்தரவிட வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை—"

—இவ்வாறு பண்டிதர் கா: பொ: இரத்தினம் அவர்களின் கேள்வியொன்றுக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து வந்த மூன்று விஷப்பாம்புகள்!

'விஷப்பாம்புகள் இங்கு எத்தனையோ இருக்கின்றன. வடக்கில் இருந்து இங்கு எத்தனையோ விஷப்பாம்புகள் இருக்கின்றன.'

—நாடாளுமன்றத்தில் ஆனந்தசங்கரி.

—எத்தனையோ என்ன? வடக்கிலிருந்து வந்த அந்த மூன்று விஷப்பாம்புகளையும் அடுத்த தேர்தலின்போது அடித்துத் துரத்தி விட்டுத்தான் தமிழ் மக்கள் மறுவேலை பார்ப்பார்கள் என்கிருன் நம் அலுவலகப் பையன்!

## தமிழ் அமைச்சரின் கீழ் தமிழுக்கு அவமானம்!

யாழ்ப்பாணத்தில் திரு. கா. பொ: இரத்தினம்பெயரிலுள்ள தனிப்பட்ட தொலைபேசியின் வாடகையை செலுத்துமாறு ஆங்கிலத்தில் யாழ்ப்பாண அஞ்சல் நிலைய அதிபர் அண்மையில் திரு. இரத்தினத்துக்கு எழுதியிருந்தார். இதனுடன் தமிழ் இடம்பெருத ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமுள்ள படிவங்களை ஆங்கிலத்தில் நிரப்பி அனுப்பியிருந்தார்.

இதை ஆங்கிலத்தில் ஏற்கமுடியாதென்றும், தமிழிலேயே தொடர்பு கொள்ளும் தனக்கு தமிழிலே அனுப்ப வேண்டுமென்றும், தமிழிலே அவற்றை அனுப்புமாறும் கேட்டு திரு: இரத்தினம் யாழ் தபால் அதிபருக்கு கடிதம் எழுதி பதிவஞ்சலில் அனுப்பியிருந்தார்.

இதன் பிரதியை அஞ்சல் அதிபர் நாயகத்துக்கும்பதிவுத் தபாலில் அனுப்பியிருந்தார். இரண்டரை மாதங்களின்பின் எவ்விதமறுமொழியுமின்றி அவருக்கும் தெரியாமல் அவர் கொழும்பில் இருந்தபொழுது அவருடைய தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தமிழில் வேண்டும்; ஆங்கிலம் வேண்டாம் என்று கேட்ட பா.உ. வுக்கே இந்த தண்டனையென்றுல் சாதாரணமான மக்களின் நிலை என்னவாகும்! தமிழ் பகுதிகளிலே கூட தமிழுக்கு உரிமை கொடுக்க தபால் பகுதியினர் மறுக்கின்றனர்: உரிமை கேட்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் தண்டிக்க முயல்கின்றனர்.

இத்தனைக்கும் இத்தபால் பகுதி ஒரு தமிழ் அமைச்சரின் கீழ் இருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள தபால் அலுவலகம் தனது அலுவல்கள் எல்லாவற்றையும், தமிழர்களுடனுன அலுவல்கள் எல்லாவற்றையும், தொடர்ந்து ஆங்கிலத்திலேயே செய்து வருகிறது. இதைப் பலமுறை இரத்தினம் கண்டித்ததுடன் மட்டுமன்றி தபால் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிருர்; இந்தவிடயம் இனி பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 'முரசொலி' தலையங்கம்!

இலங்கையின் அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் தமிழரசுக்கட்சியினுல் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதைக் கண்டித்து தமிழ் நாட்டிலிருந்து வரும் தி. மு. க. நாளேடான 'முரசொலி' அதன் 24-5-71 இதழில் காரசாரமான ஆசிரியத் தலையங்கம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

'முரசொலி' தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஏடு என்பது தெரிந்ததே. 'தமிழன் என்ரெரு இனம் இருக்குமா?' என்பதே

(2-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அனுப்பப்படும் தூதர் தமிழராக இருக்க வேண்டும்!

### டெல்லியிடம் தி. மு. க. அரசு வற்புறுத்தும்!

இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் இந்தியத் தூதுவர் ஒரு தமிழராக இருக்க வேண்டுமென டெல்லி மத்திய அரசிடம் த்மிழ்நாடு அரசு வலியுறுத்தவிருக்கிறது.

இலங்கை, மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் வாழும் இந்தியர்களில் பெரும்பான்மையர் தமிழினத்தவர்களாக இருப்பதனுல் இந்நாடுகளுக்கு அனுப்பப்படும் இந்தியத்தூதர் தமிழராக இருக்க வேண்டுமென தமிழக ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே தி. மு. க: தனது ஒவ்வொரு மாநில மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது:

இலங்கையைப் பொறுத்தவரையில், சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் அமுல் நடத்தப் படவிருக்கும் சூழ்நிலையில் தமிழர்களின் நலன்களைக் கவனிக்க தமிழர் ஒருவரே இந்தியத் தூதராக இருப்பது நல்லது என்று தி.மு.க. அரசு கருதுகிறது.

இலங்கைக்கு தமிழ்

(2-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது!

தீக்குள் விரலை வைத்தால்....?

யாழ்- ஜனர்த்தனன் எழுதும் புத்தம் புதிய தொடர் நவீனம்

உங்கள் பிரதிகளுக்கு இப்பொழுதே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்!

'வாழும் உடலை வகையாய் வைக்க
நாளும் ஆசனம் நன்ருய்ப் பழகு
பிண்டத் துள்ள பிராண னடக்கி
அண்டத் துள்ள தனைத்தும் வெல்க.'
—ஸ்வாமி ஸத்சிதானந்தா:

யோகக்கலை என்னும் அரிய நூலை விளக்கப்படங்களுடன் 3வது பதிப்பாக வெளியிட்டுள்ளோம்: 10 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தமிழரசு எம்.பீக்களே உஷார்!

அரசியல் நிர்ணய சபையில் தமிழினத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியினரால் இதுவரை கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டன:

சிங்களப் பெரும்பான்மையினரைக்கொண்ட அரசியல் நிர்ணய சபை தமிழினத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏறெடுத்துப் பார்த்திடவும் மறுத்து விட்டது!

தமிழினத்தின் அதி முக்கியமான சில கோரிக்கைகளை—தமிழ்மொழிக்கு இந்நாட்டின் அரசியல் அமைப்பில் சட்ட ரீதியாக வழங்கப்படவேண்டிய உரிமைகள் பற்றிய குறைந்த பட்சக் கோரிக்கைகளை—இனிமேல்தான் அரசியல் நிர்ணய சபை விவாதித்து முடிவு காணவிருக்கிறது.

ஆம்—இம்மாதம் 10ம் நாள் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறப்போகும் அரசியல் நிர்ணய சபைக்கூட்டங்களின்போதுதான் தமிழ்மொழியுரிமைகள் சம்பந்தமாக தமிழ்மக்கள் விடுத்துள்ள குறைந்தபட்சக் கோரிக்கைகளையிட்டு அரசாங்கத்தின் நிலையென்ன என்பது அம்பலத்துக்கு வரப்போகிறது:

தமிழ்மொழியுரிமை சம்பந்தமாக விடுக்கப்பட்ட குறைந்தபட்ச கோரிக்கைகள், தமிழினத்தின் உயிருக்கு நிகரானவை; சிறிது கூட விட்டுக் கொடுக்க முடியாதவை.

தமிழ் — தமிழ் பிள்ளைகளின் போதனு மொழி,

தமிழ் — வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி,

தமிழ் — வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களின் நிர்வாக, பதிவு மொழி,

தமிழ் — தமிழன் இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும் அரசுடன் தொடர்பு கொண்டு பதில் பெறும் மொழி,

தமிழ் — தமிழ் மாணவர் உயர் கல்வி கற்கவும் தமிழர் அரசாங்க, கூட்டுத்தாபன சேவைகளில் சேர்வதற்கும் பயன்படுத்தும் மொழி,

என்கின்ற இந்த ஐந்து அம்ச மொழியுரிமைக்கோரிக்கைகளும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டத்தில் அப்படியே இடம்பெற வேண்டும்—அப்படி இடம் பெற்ருல் மட்டுமே சிங்கள ஏகாதிபத்திய வெள்ளத்தில் மூழ்கி அழிந்துவிடாமல் தமிழினம் இந்நாட்டில் ஓரளவு தப்பிப் பிழைத்திடமுடியும் என்று நாங்கள் கருதுகிறோம்:

நாடு இன்று அடைந்துள்ள பயங்கரமான பொருளாதாரச் சீர்கேட்டிலிருந்து மீள்வதற்கு இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்று பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் வேண்டுகோள்விடுத்துவருகிருர்கள்;

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இந்நாட்டின் வளத்துக்கு எப்பொழுதும் உழைத்துக்கொண்டுதான் இருக்கிருர்கள். பயங்கரவாதிகளின் நாட்டுத்துரோகச் செயல்களுக்கு தமிழர்கள் கிஞ்சித்தும் இடம் தரவில்லையென்பதொன்றிலிருந்தே தமிழர்களின் நாட்டுப்பற்றை அரசாங்கம் உணர்ந்து கொண்டிருக்கவேண்டும்!

தமிழ் பேசும் மக்கள், தாமும் இந்நாட்டின் உரிமையுள்ள பிரஜைகள்; சிங்கள மக்களோடு சமத்துவமுள்ளவர்கள்; சிங்கள மொழிக்கு தரப்பட்டுள்ள உரிமைபோல தமிழ் மொழிக்கும் உரிமை தரப்பட்டிருக்கிறது; என்கின்ற மன நிறைவினைப் பெறுவதற்கு ஏற்றவகையில் தமிழ்மொழிக்கு உரிமைகளை வழங்கி மொழிப்பிரச்சினைக்கு ஓர் முடிவு காண அரசு முன்வரவேண்டும்!

(பந்தி தணிக்கை செய்யப்பட்டது)

இந்நேரத்தில் தமிழரசுக்கட்சியினருக்கும் ஒருவார்த்தை கூறிவைக்க விரும்புகிறோம்—

தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கோரிக்கைகளை அரசாங்கமும், அரசியல் நிர்ணய சபையும் ஏற்றுக்கொள்ள மறுக்குமாஞல்—

இந்நாட்டில் தமிழையும் தமிழினத்தையும் ஒழித்துக்கட்ட அது முடிவு செய்து விட்டது என்பதுதான் அர்த்தமாகும்: தமிழுக்கு சவக்குழி தோண்டுகிறது என்பதுதான் பொருளாகும்!

எனவே,

தமிழ் மொழியுரிமை சம்பந்தப்பட்ட திருத்தங்களும் நிராகரிக்கப்படுமாஞல்—

தமிழரசு பா. உ. க்கள் தொடர்ந்தும் அரசியல் நிர்ணய சபையில் பங்குபற்ருது பகிஷ்கரித்து வெளியேறவேண்டும்.

தமிழுக்கு கொள்ளிவைக்கும் அரசியல் நிர்ணயசபையில் எங்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கவேண்டாம்!

அநீதியான சட்டங்களுக்கு ஒத்துழைக்க மறுப்பதுடன் தமிழினத்தின் உரிமைப்போராட்டம் மீண்டும் ஆரம்பமாகட்டும்!

அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிப்பதுடன் அடுத்து என்ன நடவடிக்கையிலீடுபடுவது என்பதை இம்மாதம் 14ம் நாள் யாழ் நகரில் கூடும் தமிழரசுப் பொதுச்சபை பொறுப்புணர்ச்சியுடன் சிந்தித்து முடிவு செய்ய வேண்டுமென்று தமிழ்பேசும் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

# சிங்களத் தேர்ச்சியும் தமிழ் அரசு ஊழியரும்

'அரச சேவையிலிருந்துதமிழரை விரட்ட சூழ்ச்சி' என்ற தலைப்பின் கீழ், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை விளக்கும் கட்டுரையொன்றினை 2-5-71 சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம். அக்கட்டுரையில் இடம் பெருத அரசாங்க ஊழியர்களின் பிரச்சினை பற்றிய சில தகவல்களை ஓர் அன்பர் நமக்கு அனுப்பியுள்ளார் அவற்றை கீழே தருகிறோம்.

(1) 1969, 1970, 1971-ம் ஆண்டுகளில் நடைபெற்ற சிங்கள தேர்ச்சி பரீட்சையில் எட்டாம் வகுப்பிற்கு சமமான 3-ம் தரம் (grade iii) சித்தியெய்திய எத்தனையோ தமிழ் அரசாங்க ஊழியர்களின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. சம்பள உயர்வுகள் வழங்கப்படவும் இல்லை.

(2) நியமன கடிதப்படி எட்டாம் வகுப்புத்தான் (grade iii) சித்தியடைய வேண்டும்:

(3) உறுதிப்படுத்தாததற்கு திறைச்சேரி காட்டும் காரணம், சித்தியெய்துவதற்கு கொடுக்கப்பட்ட கால எல்லையாகிய 1968-க்குள்சித்தியடையத்தவறியது என்பதாகும். அப்படியாயின் இக்குறிப்பிட்டவர்களின் நிலை என்ன என்பது பற்றி அரசாங்கம் ஒன்றும் தெரிவிக்கவில்லை:

(4) நியமனம் உறுதிப்படுத்தாது இருப்பதால் ஓர் அரசாங்க ஊழியனுக்கு எவ்வளோ நஷ்டம் ஏற்படுகிறது, அவனது முன்னேற்றமும் தடைப்படுகிறது; உதாரணமாக, ஓர் புலமைப்பரிசில் பெறுவதற்கோ அல்லது வேறு உயர்பதவி * பெறுவதற்கோ விண்ணப்பம் செய்வதற்கு சகல தகுதியும், தகைமையும் இருந்தாலும் நியமனம் உறுதிப் படுத்தவில்லையாயின் விண்ணப்பம் செய்ய முடியாது.

(5) இப்படி சித்தியெய்த வேண்டிய தரத்தில் சித்தியடைந்த பின்னும் நியமனம் உறுதிப்படுத்தப்படாதவர்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தில் 10-முதல்-14 வருட சேவை செய்தவர்களும் ஆவர்.

(6) அரசாங்க சட்டப்படி பத்து வருடம் சேவையாற்றிய ஓர் அரசாங்க ஊழியர் சுகவீன காரணமாக இளைப்பாற்று சம்பளம் பெறலாம்; ஆனல் மேலே 5 இல் குறிப்பிடப்பட்டவர்கள் இளைப்பாற்று சம்பளம் பெற முடியாது. காரணம் நியமனம் உறுதிப்படுத்தாமையே.

(7) ஒரு கம்பனியில் 10 வருடம் கடமையாற்றிய பின் சுகவீன காரணமாகவோ அல்லது வேறு சொந்தக் காரணமாகவோ விலகிஞல் சகாய நிதி கிடைக்கும்; ஆனல் அரசாங்கத்தில் கடமையாற்றி (5) இல் குறிப்பிடப்பட்டவர்கள் வேலையிலிருந்து விலகிஞலோ, விலக்கப்பட்டாலோ ஒரு சதமும் கொடுக்கப்பட மாட்டாது.

(8) 1966 தை 8ம் திகதி நடைபெற்ற அரசாங்கத்திற்கு எதிரான ஊர்வலத்தில் பங்குபற்றியதற்காக வேலையிலிருந்து நிற்பாட்டப்பட்ட 1000க் கணக்கான சிங்கள ஊழியருக்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் வேலையும் கொடுத்தது (66-70) கடமையாற்ருத காலத்திற்கும் உரிய சம்பள உயர்ச்சியும் கொடுக்கப்பட்டது. ஆனல் தமிழ் அரசாங்க ஊழியன் அரசாங்க நிபந்தனைப்படி, எவ்வளவோ கஷ்டத்திற்கு மத்தியில் சிங்கள தேர்ச்சி பெற்ற பின்பும், சம்பள உயர்ச்சியும் இல்லை. நியமன உறுதியும் இல்லை. இதுதான் சோசலிசமா?

(9) சித்தியெய்திய பின்னும் நியமனம் உறுதிப்படுத்தாமலும், சம்பள உயர்ச்சி பெருமலும் இருப்பதில், வைத்தியர்கள், (டாக்டர்கள்) தாதிமார், எழுதுவினைஞர், அஞ்சல் அதிபர்கள் மற்றும் பல பிரிவுகளையும் சேர்ந்தவர்களும் உண்டு.

## பீட்டர்கெனமனின் யாழ் விஜயம்

அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம், கடுமையான பத்திரிகைத் தணிக்கை, இவையாவும் அமுலிலிருக்கும் சூழ்நிலையில், கடந்தவாரம் வீடமைப்பு அமைச்சர் பீட்டர்கெனமன் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்தார். ஐ. மு. அரசுக்கு தமிழர்களிடையே ஆதரவு பெருகுவதாகவும், தமிழர்கள் அரசாங்கத்தை ஆதரிப்பதாகவும்—கூறியதுடன், தமிழரசுக் கட்சியினரையும் வாயில் வந்தபடி திட்டித் தீர்த்துவிட்டு 'வெற்றி வீரராக' கொழும்பு திரும்பியுள்ளார். பீட்டரின் 'வீரம்' எப்படிப்பட்டது பார்த்தீர்களா?

## இரண்டு செய்திகள்

'மலையக மக்களின் முக்கியஸ்தர்களில் ஒருவரான (சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்) திரு. சண்முகதாசன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது'

—மூதவையில்
திரு. யேசுதாசன்
(தினகரன் 31-5-71)

இலங்கைக்கு வட்டியில்லாக் கடனுக சீனு 15 கோடி ரூபாவை கொடுக்க முன்வந்திருக்கிறது.

—டெயிலிமிரர் (27-5-71)

## சிங்களப் பற்று...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கும்போதுநாடாளுமன்றத்தில் 4-5-71ல் கூறியிருக்கிருர் துணை தபாலமைச்சர் வி.ரி.ஜி. கருணரத்தின;

கொழும்பு செயலக அஞ்சல் நிலையத்தில் தமிழில் முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதங்களுக்கு சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் பற்றுச்சீட்டுக்கள் கொடுபடுவது அமைச்சருக்கு தெரியுமா என்றும் தமிழில் முகவரியிட்டு பதிவதற்கு கொடுக்கப்படும் கடிதங்களுக்கு பதிவுப் பற்றுச்சீட்டை தமிழிலே கொடுக்கும்படி துணை அமைச்சர் உத்தரவிடுவாரா என்றும் பண்டிதர் இரத்தினம் கேட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த துணை அமைச்சர் கூறியதாவது:—

''கொழும்பு செயலக தபால் நிலையத்தில் தமிழில் முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதங்களுக்கு சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே பற்றுச்சீட்டுக்கள் கொடுக்கப்படுவது எனக்குத் தெரியும்: இது அரசாங்கத்தின் மொழிச்சட்டங்களுக்கு உடன்பாடானதே. எனவே எல்லா அஞ்சல் நிலையங்களுக்கும் தமிழில் முகவரியிடப்பட்ட கடிதங்களுக்கு தமிழில் பற்றுச்சீட்டு கொடுக்கும்படி பணிப்புரை அனுப்பவேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை—''

## உத்தியோகப் பற்றற்ற அதிகாரி



உத்தியோகப் பற்றற்ற அதிகாரியாக சரவணை மேற்கைச் சேர்ந்த வே. இராசையா ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை இலாகாவிஞலும், லங்கா சதொசலா நிறுவனத்தாலும் நிர்வகிக்கப்படும் சகல டிப்போக்கள், கடைகள் ஆகியவற்றுக்கு கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரிஞல் நியமிக்கப்பட்டுள்ளார். சரவணை கிராம முன்னேற்ற சங்கம், சரவணை — வேலணை மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும், கடமையாற்றிய இவர் நாரந்தனை கிராமச்சபை முன்னுள் உறுப்பினருமாவார்.

## இலங்கைக்கு அனுப்பப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென தமிழக அரசு டெல்லியிடம் இடித்துரைக்க வேண்மென அண்மையில் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழிரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களும் கோரியுள்ளார்.

தமிழக அரசின் கோரிக்கை டெல்லி அரசின் காதுகளில் ஏறுமா என்பதை அறிய இலங்கையிலுள்ள தமிழர்கள் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

## இலங்கைத் தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தலையங்கத்தின் தலைப்பாகும். பத்திரிகைத் தணிக்கை அமுலில் இருப்பதால் அத்தலையங்கத்தை சுதந்திரனில் மறுபிரசுரம் செய்ய [illegible] வாசகர்களுக்கு [illegible] கிறோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘மும்மூர்த்திகள்’ கதை!

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

ஒருகதை சொல்கிறேன் கேட்கிருயா—சின்னஞ் சிறு கதை! வௌவால் கதை!

ஒருமுறை அடவியில் விலங்குகளுக்கும் பறவைகளுக்குமிடையே கடும் பகை மூண்டது. பறவைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து விலங்குகளுடன் போர் செய்யத் தொடங்கின. இந்நிலையில் வௌவாலுக்கு ஒரு பெரும் பிரச்சினை ஏற்பட்டதாம்! பறவைகளுடன் சேர்வதா விலங்குகளுடன் சேர்வதா என்று அதற்குப் புரியவில்லையாம். இதனுல் சில நாட்களாக அது ஒரு பக்கமும் சேராது தனித்து இருந்தது.

சின்னுட்களுக்கு பின்னர் பறவைகளே யுத்தத்தில் வெற்றியடையும் போலக் காணப்பட்டன. உடனே வௌவால் தானும் ஒரு பறவையென்று சொல்லிக்கொண்டு பறவைகள் பக்கத்துடன் சேர்ந்துகொண்டதாம்.

இன்னும் சின்னுட்கள் சென்றன. இப்போது விலங்குகளே யுத்தத்தில் வெற்றியடையும் நிலை தோன்றியது. உடனே வௌவால், பறவைகள் பக்கத்திலிருந்து வெளியேறி விலங்குகள் பக்கம் சேர்ந்துகொண்டது; சேர்ந்து கொண்டதுமட்டுமா—‘என்னைப்பறவையென்று யார் சொன்னது? நானும் விலங்கல்லவா’ என்று அறிக்கை வேறு விட்டது!

போர் முடிந்தது—இரு பகுதிக்கும் சமரசம் உண்டாயிற்று. பறவைகளும் விலங்குகளும் பேதங்களை மறந்து சமாதானமாயின — அப்போது வௌவால் பாடு படு திண்டாட்டமாகிவிட்டது. பறவைகள் பக்கமும் தலை காட்டமுடியவில்லை; விலங்குகள் பக்கமும் சேர முடியவில்லை — இரு பக்கமும் வௌவால் மீது காறியுமிழ்ந்தன!

இதனுல் தன் மூடப் புத்தியை நினைத்து தன்னைத்தானே நொந்துகொண்ட வௌவால் இரு பக்கத்துடனும் சேர்ந்துவாழ முடியாமல் தனித்து வாழத் தொடங்கியதாம்!

நண்பா, இதுதான் கதை; ஈஸாப் சொன்ன அருமையான அரசியல் தத்துவம் அடங்கிய குட்டிக்கதை; இந்தக் கதையை அளவெட்டியிலிருந்து ஒரு தம்பி எழுதி அனுப்பியிருக்கிருன்!

இதில் பொதிந்துள்ள அரசியல் தத்துவம் உனக்குப் விளங்குகிறதல்லவா? ஒரு கொள்கையில் உறுதியாக நிற்பவனையே உலகம் மதித்திடும்; நேரத்துக்கு ஒரு கொள்கை; நிமிஷத்துக்கு ஒரு கட்சி என்று அடிக்கடி கொள்கை மாறுபவனை மக்கள் ஒதுக்கிடுவர் என்பதன்ரே இதில் பொதிந்துள்ள கருத்து!

நண்பா, ஆளுங்கட்சியிடம் சரணுகதியடைந்துள்ள தமிழ் பா. உ.க்களைப் பார்த்திடும்போது இந்த வௌவால்களின் கதையன்ரே நினைவுக்கு வந்திடுகிறது நமக்கு!

தன் மானத்தமிழ்மறவர் வாழ்ந்திடும் மீன்பாடும் தேனுட்டின் இரண்டாவது பிரதிநிதியான பி. ஆர். செல்வநாயகம் இப்போது ஆளுங்கட்சியின் அடி நக்கி வாழுகிருரல்லவா? இவர் சார்ந்து இருந்திட்ட கட்சிகள் தாம் எத்தனை எத்தனை? இந்நாட்டிலே இவர் இருக்காத கட்சிகளே இல்லை; ஏன், 1970 தேர்தல் சமயத்திலே இவர் யூ. என். பி. ஆதரவாளர், யூ. என். பி. கட்சியினர் இவருக்காக ஓடியாடி வேலை செய்தனர்; இவர் யூ. என். பி ஆட்களுக்காக உயிரைக்கொடுத்து உழைத்திட்டார். ஆனுல் யூ. என். பியால் அரசுகட்டிலைப்பிடித்திட முடியவில்லையென்ற நிலை ஏற்பட்ட போது இவர் என்ன செய்தார் என்பது தான் உனக்கு புரியுமே!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்திட முதலில் முயற்சியெடுத்ததும், அது கைகூடாமல் போகவே, லங்கா சமசமாஜக் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்ததும், மட்டுநகர் இரண்டாவது பா. உ. தமது கட்சியில் சேர்ந்துவிட்டதாக சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் லெஸ்லி குணவர்த்தனு பகிரங்கமாக அறிவித்ததும், லெஸ்லி குணவர்த்தனுவின் அறிவிப்பு வெளிவந்து ஒருகிழமை முடிவதற்குள் ‘குபீர்’ குத்துக்கரணமடித்து சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்ததும் நாட்டினர் அறிந்திட்ட கதையன்ரே?

நண்பா, ‘பரத்தைகள்’ நம் சமுதாயத்தில் மட்டும் இல்லை-அரசியலிலும்பலர் இருந்திடவே செய்கிருர்கள் என்பதற்கு தகுந்த சிறந்த எடுத்துக்காட்டு மட்டக்களப்பு இரண்டாவது பா. உ. வின் அரசியல் வாழ்வன்ரே?

நான் இப்படிக் கூறிடும்போது, அரசியல் பரத்தைத்தனத்தில் மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி மட்டுந்தானு சிறந்தவர்; ஏன் நாங்களிருப்பது உன் கண்களுக்குத் தெரியவில்லையா என்று தமிழ் காங்கிரஸ்? பா. உ.க்கள் மூவரும் கண்களில் கனல் பறந்திடக் கேட்டிடக்கூடும்!

ஆனந்த சங்கரியும், தியாகராசாவும், அடித்திட்ட அரசியல் பல்டிகளும், கொள்கைக் குத்துக்கரணங்களும், தனித்தமிழ் நாடு கேட்டுப் புத்தகம் எழுதியவர் இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தின் தாள்பணிந்து பிச்சை கேட்டிடுவதும் தமிழர் மறந்திட முடியாச் சம்பவங்களன்ரே?

சமஷ்டியின்கீழ் மாநில சுயாட்சியா? அது போதவே போதாது; சமஷ்டி வந்திடினும் மத்திய அரசில் சிங்கள ஆதிக்கமே இருந்திடும்; தமிழர் விடுதலைக்கு ஒரே வழி தனித்தமிழ் நாடு அமைத்திடுவதே; தனித்தமிழ்நாடு நிறுவுவதற்கு வேண்டிய பொருளாதார வளமும் நம்மிடம் உண்டு; என்று புள்ளி விபரங்களுடன் புத்தகம் எழுதி ‘நாட்டுப் பிரிவினை’ கேட்ட தியாகராசா; இன்று சிங்களவர் இடும் பிச்சையை நம்பியே தமிழர் இந்நாட்டில் வாழ்ந்திடவேண்டும் என்று கூறுகிருரென்ருல் இதைவிடப் பெரிய ‘புரட்டல்’; அரசியல் ஈனத்தனம்; தமிழ்த்துரோகம்; வேறு ஏதாவது இருந்திட முடியுமா?

தமிழ் காங்கிரசை—இப்போதைய அதன் பா. உ. க்களையல்ல-நினைத்திடும்போது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன்: இடையில் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு சிங்கள அரசிடம் சரணுகதியடைந்து பதவியாசை பிடித்து, தமிழினத்தைக் அது காட்டிக்கொடுத்ததுஎன்ருலும்—தமிழ் காங்கிரஸ் தொடங்கப்பட்ட நேரத்தில் எத்துணை பெரிய இலட்சியத்துடன் ஆரம்பிக்கப்பட்டது! தமிழன் என்று சொல்லடா—தலை நிமிர்ந்து நில்லடா’ என்று இன உணர்வைத் தட்டியெழுப்பியது தமிழரசுத் தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் போன்றவர்களையெல்லாம் உள்ளடக்கிய—அன்றைய காங்கிரஸ் அன்ரே!

அத்தகைய கட்சி, தமிழினத்தைக் கொலை செய்யும் சதித் திட்டங்களுக்கு உடந்தையாக இருந்திடும் மூன்று பா. உ.க்களை இன்று பெற்றிருப்பது அக் கட்சியின் துரதிருஷ்டம் என்பதா, தமிழினத்தின் துரதிருஷ்டம் என்பதா என்றே கேட்டிட வேண்டியுள்ளது!

நண்பா அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் பொதுவான, சில முக்கிய குறைந்தபட்சக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக வல்வையில் அனைத்துத் தமிழ் கட்சிகளுடைய மாநாடு ஒன்று நடைபெற்றதல்லவா? அன்று ஏற்பட்ட அந்த ஒற்றுமையை —தமிழ் காங்கிரஸ் தலைமையும் சேர்ந்து உருவாக்கிய ஒற்றுமையை — உடைத்தெறிந்திட தமிழ் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மும்மூர்த்திகளும் எத்துணை தூரம் முயற்சி செய்தனர்; முயற்சிசெய்து வருகின்றனர்; என்பது நாட்டினருக்கு தெரியாமலா இருந்திடும்?

நல்லூர் பா. உ. அருளம்பலம் சுகவீனமாகவிருப்பதாகவும், மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளை தாம் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்ததாகவும், வல்வை மாநாட்டில் தமிழ்காங்கிரஸ் துணைச் செயலாளர் உறுதி மொழியளித்தார் அருளம்பலம் சார்பாக!

> ‘வல்வெட்டித்துறையில் நடந்த தமிழ்க்கட்சித் தலைவர்களின் மகாநாட்டில் ஏற்பட்ட முடிவுகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்; அவர்கள் அடிப்படை தீர்மானங்களுக்கு திருத்தங்கள் அனுப்பினுல் நாங்கள் அதைப் பாரமேற்க மாட்டோம்; ஆதலால் நாம் அவற்றை ஆதரிக்கவும் மாட்டோம்?
>
> -ஈழநாடு (9-2-71)

—இவ்வாறு வல்வை ஒற்றுமை மாநாட்டுக்கு மறுநாள் ஒற்றுமை முயற்சிக்கு வேட்டு வைத்தார் அருளம்பலம்!

இப்படிக் கூறிய அருளம்பலம் 5-3-71 தினகரன் ஏட்டில் தமிழரசுக்கட்சி மீது ஒரு அபாண்டத்தைச் சுமத்தினுர்.

> ‘வல்வெட்டித்துறையில் உருவாக்கப்பட்ட நான்கு கட்சிப் பிரமுகர்களினதும் ஒன்பது அம்ச கோரிக்கைகளை அரசியல் நிர்ணயசபை வழிகாட்டு விஷயாலோசனைச் சபையில் தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பிக்கவில்லை’

என்றுகூறி தமிழ் மக்களின் ஒற்றுமையை உடைத்திடும் நோக்குடன் ஒரு கதையைக் கட்ட முயற்சித்தார்;

ஆனுல் நண்பா, அருளம்பலத்தின் அபாண்டம் நீண்ட காலத்துக்கு நிலைத்திடவில்லை; அரசியல் நிர்ணய சபையில் வல்வை மாநாட்டுத் திருத்தங்கள் சில தமிழரசாரால் அண்மையில் கொண்டுவரப்பட்டபோது அருளம்பலம் கட்டியெழுப்பிய பொய்க் கோட்டை கலகலத்து இடிந்து விழுந்தது மாத்திரமல்ல; அருளம்பலம் யார் என்பதையும் தமிழ்மக்களுக்கு காட்டிக்கொடுத்துவிட்டது!

‘வல்வெட்டித்துறையில் ஒற்றுமை முன்னணி மாநாடு என்று ஒன்று நடந்ததா? அப்படி ஒன்று நடந்ததாக எனக்கோ எனது கட்சிக்கோ தெரியவே தெரியாது’

என்று பச்சைப் பொய்யை அள்ளிவீசியது மட்டுமல்ல—வல்வை ஒற்றுமை மாநாட்டுத் தீர்மானங்களை அரசியல் நிர்ணயசபையில் ஆதரித்திடவும் அருளம்பலம் முன்வரவில்லை!

அருளம்பலத்தின் கதை இதுவென்ருல்—இனி தியாகராசாவின் கதையைக்கேளேன்!

அரசியலமைப்பு அடிப்படைத்தீர்மானங்களை, அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா வெளியிட்ட நேரத்தில், இந்தத் தீர்மானங்கள் தமிழினத்தை நிர்மூலமாக்கி, மரணக்குழிதோண்டும் தன்மை வாய்ந்தன என்று கூறி தமிழ் பேசும் மக்கள் கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர். அந்நேரத்தில் அத்தீர்மானங்களை முழுக்கமுழுக்க ஆதரித்து அறிக்கைவிடுத்தவர்தான் திரு. தியாகராசா!

கொல்வின் ஆர். டீ. சில்வாவின் அடிப்படைத் தீர்மானங்கள் தமிழினத்துக்கு உரிமைகளை வாரி வழங்குகிறது; இதை விட தமிழனுக்கு அதிக நன்மை வேறு இருக்கவே முடியாது; இதை தமிழர்கள் ஏற்றுக்கொண்டு அமைதியடையவேண்டும்’—என்றெல்லாம் கூறி தமிழினத்தின் தூக்கு கயிற்றுக்கு வக்காலத்து வாங்கினுர் தியாகராசா! (ஆதாரம் 3-2-71 தினகரன் முன் பக்கச் செய்தி)

இப்படிக்கூறிய தியாகராசா, யாழ்ப்பாணத்தில் கூடிய—அருளம்பலமும் கலந்துகொண்ட—தமிழ்காங்கிரஸ் கட்சியின் பொதுச் சபைக்கூட்டத்தில் பேசும்போது என்ன கூறினுர் தெரியுமா?

> ‘இன்றைய அரசு தமிழர்களுக்கு நீங்கள் கேட்கும் ஒன்பது அம்சங்களைகொண்ட நன்மைகளை விட கூடுதலான உரிமைகளைத் தரும். அதனை நாம் பெறுவோம். உங்களது ஒன்பது அம்சகோரிக்கைகளை அரசியல் நிர்ணய சபையில் ஆதரிப்போம்’—(தினகரன் 10. 2. 71)

—இவ்வாறு தமிழ் காங்கிரஸ் பொதுச் சபைக்கு உறுதியளித்தபடி அரசியல் நிர்ணய சபயில் வல்வைத்தீர்மானங்களை ஆதரித்திட தியாகராசா முன்வராததேன் என்று கேட்டிட வேண்டியது தமிழ் காங்கிரசிலுள்ள இளைஞர்களது கடமையாகும்!


ஒன்பது அம்சங்களைவிட அதிக நன்மையை அரசு அள்ளித்தரப்போகிறது என்றீரே; ஒன்பது அம்சகோரிக்கையைக் கூட அரசு இப்போது ஏற்க மறுத்துவிட்டதே!— இனியும் ஏன் ஆளும் கட்சியில் ஒட்டியிருந்து அம்மாவுக்கு ஆலவட்டம் வீசுகிறீர்; என்று தமிழ் காங்கிரசில் இருந்திடும் ஒரு சில தமிழுணர்ச்சியுள்ள இளைஞர்களாவது தியாகராசவை இடித்துக் கேட்டிடமாட்டார்களா?

அரசியலமைப்பு அமைச்சரின் அடிப்படைத் தீர்மானங்கள் தமிழர்களுக்கு நன்மையளித்திடும்; இதைவிட தமிழர்களுக்கு அதிக நன்மையிருக்கமுடியாது; வல்வெட்டித்துறையில் உருவாக்கப்பட்ட ஒன்பது அம்சங்களைவிட அதிக நன்மைகளை அரசு அள்ளித்தர விருக்கிறது; என்றெல்லாம் கூறிய தியாகராசா ‘ஸ்டண்டு’ ஒன்றையும் நடத்திக்காட்டிடவிரும்பினுர் போலும்! (11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் சொத்துரிமை வரையறுக்கப்பட வேண்டும்!

## தமிழரசுக் கட்சியின் கொள்கை இதுவே!



தனியார் சொத்துக்கு வரையறை விதிப்பது கூடாது என்றும், 'மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்திற்கு முடிவு காணும் வகையில்' என்று இருப்பதை நீக்கவேண்டுமென்றும் அரசியலமைப்பு 4வது அடிப்படைத் தீர்மானத்திற்கு ஐ. தே. கட்சி திருத்தம் கொண்டு வந்திருந்தது. அத்திருத்தத்தை எதிர்த்தும், 4வது அடிப்படைத் தீர்மானத்தை ஆதரித்தும் தமிழரசுக் கட்சியின் சார்பில் உடுப்பிட்டி பா. உ. ஜெயக்கொடி அ. நி. சபையில் பேசினர். 'தமிழரசுக் கட்சி முற்போக்கு கொள்கைகளை எதிர்க்கும் கட்சி' என்று மாற்றார் நடத்தும் பிரசாரத்துக்கு திரு. ஜெயக்கொடியின் பேச்சு சரியான சவுக்கடியாக அமைந்தது.

## அரைகுறை சோசலிசத்தில் எமக்கு நம்பிக்கையில்லை!

### ஐ. தே. க. திருத்தத்தை எதிர்த்து ஜெயக்கொடியின் சமதர்ம முழக்கம்!

இந்தத் திருத்தப் பிரேரணையிலே நான் எமது கட்சியின் சார்பில் பங்கு பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. எங்களுடைய கட்சியின் பொருளாதாரக் கொள்கையில் பல ஆண்டுகளாக அபிப்பிராயபேதம் இருந்து வருகின்றது.

இங்கே விவாதிக்கப்படுகின்ற திருத்தப் பிரேரணையை நாம் ஆதரிக்க முடியாமல் இருக்கிறது என்பதை வெளிப்படையாகவே சொல்லவேண்டி இருக்கின்றது. இந்த விடயத்திலே நாங்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து அரசாங்கத்தினது தீர்மானத்தை ஆதரிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எங்களுடைய கட்சி பொருளாதார வகையில் என்ன கொள்கையைக் கொண்டிருக்கின்றது என்பது எங்கள் கட்சியால் அரசியல் அமைப்புச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளில் இருந்து விளங்கும். உதாரணமாக, எங்கள் கட்சி அவ்விதம் சமர்ப்பித்த பிரேரணைகளில் 59 ஆம் சரத்தில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால்—

"தனியார் சொத்து உடமை எல்லைகளும் தனியாரின் வருமான எல்லைகளும் சட்டத்தினால் வரையறுக்கப்படவேண்டும்"

என்பதுதான். அது ஆங்கிலத்தில்—

"Limits of ownership of private property and limits of income per person shall be defined by law."

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப் பிரேரணையின்படி தனியார் சொத்துக்கள் இருக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், சொத்துக்களுக்கு ஒரு வரையறை வேண்டும். உதாரணமாக, யூகோசிலாவியாவில் பத்து ஹெக்ரேஸ் ஒருவர் தமது (சொந்தப் பாவிப்பில் வைத்திருக்கலாம் என்று வகுத்திருக்கிறார்கள். அதைவிடத் தேவைப்பட்டால் இன்னும் ஒரு பத்து ஹெக்ரேஸ் விவசாயத்திற்காக வைத்திருக்கலாம் என்று யூகோசிலாவியா அரசு சட்டத்திலே வகுத்திருக்கிறது. அதுபோல் இந்த அரசியல் சாசனத்திலும் ஒரு தனியார் எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்பதை வரையறுக்கவேண்டும். ஒரு அளவுக்கு தனியார் சொத்து வைத்திருக்கலாம் என்பது எங்கள் கட்சிக் கொள்கை. அதை விட்டு எவரும் விரும்பிய அளவு சொத்து வைத்திருக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல.

"'மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்திற்கு முடிவு காணும் வகையில்'' என்று அடிப்படைத் தீர்மானத்தில் இருப்பதை நீக்க வேண்டுமென்று கொழும்பு தெற்குத் தொகுதி முதலாம் அங்கத்தவர் இங்குள்ள திருத்தப் பிரேரணை மூலம் கோருவது விந்தையாக இருக்கின்றது. "Exploitation of man by man" என்பதையும் நீக்கி விட்டால் இலங்கையிற் கடந்த ஐந்தாம் தேதிக்குப் பின்னர் ஏற்பட்டிருக்கின்ற நிலை மிகவும் நிச்சயமாக வரும் என்று எவரும் எதிர்பார்க்கலாம்.

இன்று இலங்கையில் குடியிருக்கவோ தங்கள் ஊதியத்துக்கோ போதிய நிலம் இல்லாமல் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். பெரிய பெரிய தோட்டங்களில் வாழ்நாள் முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் அந்த நிலத்திலே ஒரு அங்குலம்தானும் உரிமை இல்லாமல் இருக்கின்றது.

தனிப்பட்டவர்களுடைய வரவுகளில் இன்று எத்தனையோபேர் வதிகிறார்கள். எவ்வளவோ சொந்த நிலங்களை வைத்துக் கொண்டு சிலர் ஏழை எளியவர்களைச் சுரண்டி வாழ்வதை எந்த சோஷலிச அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதே வேளையில் மேலதிகமாக சொத்து வைத்திருப்பவர்களது மேலதிக சொத்துக்களை அரசாங்கம் சுவீகரிக்கலாம் என்ற கொள்கையை எங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால் அப்படிச் சுவீகரிப்பது பொதுப் பாவிப்புக்காகவும் நாட்டின் நன்மைக்காகவுமே இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை நான் விளங்கப் படுத்த வேண்டும். சுவீகரிக்கப்படும் சொத்துக்களுக்கு நட்ட ஈடு கொடுப்பதில் ஒரு வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். சுவீகரிக்கப்படும் நிலம் முழுவதுக்கும் நட்டஈடு கொடுக்க வேண்டுமா அல்லது வரையறுக்கப்பட்ட நிலத்துக்கு மாத்திரம் நட்ட ஈடு கொடுக்கவேண்டுமா என்ற வினா எழும். எங்களுடைய கொள்கை வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் எடுக்கவேண்டி வந்தால் அதற்கு நட்டஈடு கொடுக்க வேண்டும். மேலதிகமாக, அளவுக்குமிஞ்சி இருப்பதை அரசு பாவிப்புக்குச் சுவீகரித்தால் அதற்கு நட்டஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஒருவரது மேலதிக சொத்துக்களுக்கும் நட்டஈடு கொடுப்பதாக இருந்தால் மேலதிக காணி நிலம் வைத்திருப்பவர்கள் அந்தச் சொத்துக்களை நாட்டிற்காகப் பிரயோசனப்படுத்தாமல் தமது சொத்துக்களை காசாக மாற்றி வைத்திருப்பதாகத் தான் முடியும்.

அந்த விஷயத்தை எங்களுடைய அரசியல் சாசனத்திலே இப்படிச் சொல்லப்பட்டிருக்கின்றது:

"The right to reasonable compensation for any property, owned under the provisions of Article 59; and compulsorily acquired for a public purpose by the Government of the Republic or of the States."

இதிலே, 59 ஆவது சரத்து என்பது, எங்களுடைய 59 ஆவது சரத்து. அதற்குத் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்பது. இந்த விஷயத்தை நாம் வெளிப்படையாக மூடிமறையாமல் சொல்ல வேண்டியது அவசியம் என்பதால்தான் நாங்கள் இந்த விவாதத்தில் பங்கு பற்றுகிறோம்.

இந்தக் காலத்திலே சனநாயகம், சோஷலிசம் என்றெல்லாம் பேசுவது ஒரு சம்பிரதாய வழக்கமாக வந்து விட்டது. அந்தப் பதங்களின் கருத்து என்ன? சனநாயக சோஷலிசம் என்னும் பொழுது ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கருத்தைக் கொள்ளலாம். கம்யூனிசவாதிகளைக் கேட்டால் ருஷியாவிலே இருப்பதுதான் சனநாயக சோஷலிசம் என்று சொல்வார்கள். மின்னேரிய பிரதிநிதி (திரு. ரத்ன தேஷப்பிரிய சேனநாயக்க) போன்றவர்களைக் கேட்டால் சீனாவில் இருப்பதுதான் சனநாயக சோஷலிசம் என்று சொல்வார்கள. மாக்ஸிசக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களைக் கேட்டால் அவர்கள் வேறு கருத்தைக் கொடுப்பார்கள்.

அரைகுறையான சோஷலிசத்தால் [illegible] கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. ஒன்றில் முதலாளித்துவ அரசாங்கமாக—அமெரிக்கா போன்ற நாடுகள் போல—இருப்பதானால் இருக்கட்டும். அல்லது சோஷலி நாடாகஇருப்பின் நூற்றுக்கு நூறு வீதம் சோஷலிசக் கொள்கையைக் கடைப்பிடித்து அதே வழியில் முன்னேற வேண்டும். இடை நடுவில் இருந்தால் அங்கும் இல்லை, இங்கும் இல்லை என்ற நிலை தான் உருவாகும். இடை நடுவில் இருப்பவர்களுக்குத் தான் திண்டாட்டம்.

இந்த வகையில் காலஞ் சென்ற கௌரவ பண்டார நாயக்க அவர்களுடைய கொள்கையைத்தான் அரசாங்கம் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டாலும் இந்த வகையிலே மிகவும் முற்போக்கான திட்டத்தை அரசாங்கம் வகுத்திருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியக் கூடியதாக இருக்கிறது. இந்த அரசாங்கக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"The S.L.F.P.- L.S.S.P.- C.P. United Front Seeks to implement the above measures in order to carry forward the progressive advance towards the establishment of a socialist democracy that was begun in 1956 under the leadership of the late Mr. S.W.R.D. Bandaranaike."

காலஞ்சென்ற பண்டார நாயக்க அவர்களுடைய சோஷலிசக் கொள்கையை மதித்துப் பின்பற்றினாலே போதும் என்றுதான் நான் சொல்கிறேன். அவர் என்ன கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்பதை அவர் கடந்த காலத்தில் பேசிய பேச்சுக்களிலிருந்து அறியத்தக்கதாக இருக்கிறது. 1957 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திலே அவர் பேசும் பொழுது பின்வருமாறு கூறினார்:

"There are experiments going on all over world, experiments in government: here a Fascist state; there a Communist state; here semi-Fascist state; there a Communist state; and various varieties of democracies ranging from capitalist democracies such as that of the United States to liberal democracies such as that of England to socialist democracies such as those of the countries of northern Europe."


காலஞ்சென்ற பண்டார நாயக்க அவர்கள் விரும்பிய சோஷலிசம் என்னவென்றால் Western Europeஇல் இருக்கின்ற சோஷலிச முறை தான். 1959 ஆம் ஆண்டிலே குருநாகலில் நடந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மகா நாட்டில் பேசும்போது அவர் பின்வருமாறு கூறினர்:

"Politically, we are democratic as we believe that the democratic way of life is the most suitable for human progress. Economically, we believe in the socialist approach, as we are of the opinion that it is only in this way that justice can be done to the people. A third factor in our policy is our belief that cultural ang religions values must be preserved and fostered.

It will thus be seen that we are opposed to both Communism and Fascism, to Capitalism and Materialism. Our Party stands against any attempt to impose any of these on the people of this country."

எனவே, நான் முன் சொன்னது போல் உண்மையான கம்யூனிசத் தத்துவங்களை ஏற்றுக் கொண்டால் அந்த வகையிலும் நாடு முன்னேற முடியும். ஆதலால் இந்தத் திருத்தப் பிரேரணைக்கு நாம் ஆதரவு கொடுக்க முடியாதென்றும் 4 ஆம் அடிப்படைத் தீர்மானம் மிகவும் முற்போக்கான பல அம்சங்களைக் கொண்டிருக்கின்றதென்றும் சொல்ல விரும்புகின்றேன். அத்தோடு உண்யான மனச்சுத்தியோடு காலாகாலத்தில் நாம் இந்தத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நம் இலங்கை நாடு ஒரு முன்மாதிரி நாடாக அமையும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச. ஜெகஜெனனி,
சாவகச்சேரி.

கே: தமிழ் காங்கிரஸ் மும்மூர்த்திகளும் சிவபக்தர்களாக நடிக்கிருர்களே, காரணமென்ன?

ப: தங்கள் 'சிறிமாதாசத்தனத்தை' மூடிமறைப்பதற்கு?

கே: பௌத்தமதமே அரசாங்க மதம்; அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறும் ஆளும் கட்சியினரின் வாலைப் பிடித்து அவர்கள் அடிவருடிகளாகி அம்மா சரணம் கச்சாமி என்று கூறிக்கொள்ளும் ஆனந்த சங்கரிக்கு 'சிவமணி' என்றபட்டம் கொடுத்தது சரியா?

ப: ''ப(ா)வமணி'' என்பதே பொருத்தமாக இருக்கும்!

ஃ

சூ. அல்பிறெட்,
குடத்தனே.

கே: இப்போது சுதந்திரனில் தரமான தொடர் கதைகள் வெளிவருவதில்லையே...ஏன்?

ப: காரணம் தரமான தொடர் கதைகள் கிடைக்காததுதான்! அடுத்த இதழில் ஆரம்பமாகும் 'தீக்குள் விரலை வைத்தால்...!' என்னும் தொடர்கதை உங்கள் ஆவலைப் பூர்த்திசெய்யும்!

ஃ

தா. மோகனசுந்தரம்,
பண்ணுகம்.

கே:- தந்தை செல்வாவின் பின் தமிழினத்தை வழி நடத்தும் தலைவர் யார்?

ப:- இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இப்போது எழவில்லையென்று நினைக்கிறேன்!

கே:-வட்டுக்கோட்டையின் முன்னுள் பா.உ. வுக்கும் இந்நாள் பா. உ. வுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப:- முன்னுள் பா. உ. தமிழினத்துக்காக தன் உடல், பொருள் சக்தி அத்தனையையும் அர்ப்பணித்து செயலளவில் ''தியாகராசா'' வாக விளங்குகிருர்; இந்நாள் பா. உ. பெயரளவில் மட்டும் தியாகராசாவாகவும் செயலளவில் துரோகராசாவாகவும் இருக்கிருர்!

ஃ

தனபாலன்
சாவகச்சேரி

கே: சென்ற தேர்தலில் எங்கள் அமிர்தலிங்கத்தின் தோல்விக்கு காரணம் என்ன?

ப: சாராயநாதனும், பணநாதனும்!

ஃ

ஆ. பஞ்சரத்தினம்,
பண்ணுகம்.

கே:- வட்டுக் கோட்டை பா. உ. தனது பெயரில் உள்ள பிரேரணையை அரசியல் நிர்ணயசபையில் பிரேரிக்காது பின்வாங்கியது ஏன்?

ப:- 'நக்குண்டார் நாவிழந்தார்...' என்ற பழமொழி உங்களுக்கு தெரியாதா?

கே:- தமிழினத்தின் விடிவுகாலம் எப்போது ஏற்படும்?

ப:- தமிழ்த் துரோகிகளுக்கு ஒரு முடிவு ஏற்படும்போது!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை.

கே:- தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிக்காமல் இருப்பது ஏன்?

ப:- பகிஷ்கரிக்க வேண்டிய கட்டம் இன்னும் வராததால்!

கே:- அ. நி. சபையில் தமிழரசு உறுப்பினர்களின் குரல்கள் அவ்வளவு பலமாக ஒலிக்கக்காணுமே?

ப:- ஐந்து, ஆறு உறுப்பினர்களின் குரல்களே அடிக்கடி ஒலிக்கின்றன. மீதிப்பேர் தூக்கத்திலிருக்கிருர்களோ என்னவோ?

கே:- அ. நி. சபையில் இதுவரை ஒருமுறைதானும் பேசாத தமிழரசு பா. உ. க்கள் யார்?

ப:- மாட்டின், செல்லத்தம்பு, அழகக்கோன், இராசதுரை துரைரத்தினம் ஆகியோர்!

ஃ

க. இராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே:- சிரித்திரன் பத்திரிகை பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப:- இலங்கையில் வெளிவரும் சஞ்சிகைகளில் அது ஒன்றுதான் 'ஒரிஜினலிட்டி' யுள்ள சஞ்சிகை. 'சிந்தனையாளர் சிவா' வின் பணி வாழ்க!

கே:- 'வெள்ளி' பார்த்தீர்களா?

ப:- பார்த்தேன்; வரதர் பத்திரிகை உலகில் நீண்டகால அனுபவமுள்ளவர். அவர் ஆரம்பித்திருக்கும் 'வெள்ளி' தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ஒரு 'கறுப்புக்கண்ணுடி' ப்பத்திரிகையை ஓட ஓட விரட்டியடித்துவிடும் என்று பலரும் எதிர்பார்க்கிருர்கள்.

ஃ

சுதந்திரன்பிரியன்,
காரைநகர்.

கே:- வட்டுக்கோட்டை எம். பி. தியாகராசாவுக்கு மந்திரிபதவி கிடைத்தால்...

ப:- வாலும் தெரியாது தலையும் புரியாது கொட்டக் கொட்ட முழிப்பார்...!

கே:- காசி ஆனந்தன எழுதிய புத்தகங்களின் பெயரை பிரசுரிப்பீர்களா? இந் நூல்களை எங்கே வாங்கலாம்?

ப:- தமிழன் கனவு, உயிர் தமிழுக்கு, ஆகிய கவிஞரது இரண்டு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன, இவற்றில் 'உயிர் தமிழுக்கு' நூல் இப்போது 'அவுட்ட ஸ்டொக்' 2-வது பதிப்பு இப்போது கையிருப்பில் இல்லையாம். அத்துடன் கவிஞர் எழுதிய 'படகோட்டியின் பாடல்' எனும் தத்துவக் கட்டுரைகளின் தொகுப்பும் நூல் வடிவில் விரைவில் வர இருக்கிறது. கவிஞரது நூல்களை கொள்ளுப்பிட்டியிலுள்ள ரகுநாதன் பதிப்பகத்தில் வாங்கலாம்!

ஃ

செல்வி இமெல்டா,
அனுராதபுரம்.

கே:- மனிதன் எதற்காக சந்திரமண்டலம் போய் வருகிருன்?

ப:- அங்கும் தனது இயல்புகளாகிய வஞ்சம், சூது, பொய், கபடம், அடுத்துக் கெடுத்தல் போன்ற விஷவித்துக்களை தூவுவதற்காக!

ஃ

வி. திருச்செல்வம்,
சங்கானை.

கே:- தமிழரசுக் கொடியின் மூவர்ணங்கள் எதைக் குறிக்கின்றன?

ப:- கொடியிலுள்ள மஞ்சள் நிறம் நமது இலட்சியத்தின் தூய்மையையும், அதிலுள்ள சிகப்பு அ[illegible] யத்தையடைவதற்கு நாம் செய்யவேண்டிய தியாகத்தையும், அடியிலுள்ள பச்சை தியாகத்தின் பின் நாம் அமைக்க விருக்கும் தமிழரசின் செழுமையையும் எடுத்துக்காட்டுகிறது!

கே:- முன்னை நாள் நல்லூர் பா. உ. டாக்டர் இ. மு. வி. தற்போது என்ன செய்துகொண்டிருக்கிருர்!

ப:- நோயால் மிகவும் நொடிந்து போயிருக்கிருர். அப்படியிருந்தாலும் இன்னும் அதே விடுதலை ஆவேசமும், தமிழுணர்ச்சியும் டாக்டரிடம் காணப்படுகிறது; தம்மைச் சந்திக்க வருபவர்களிடமெல்லாம் தமிழர் விடுதலை பற்றியே உணர்ச்சியுடன் பேசுகிருர்! டாக்டர் தமிழினத்துக்காக செய்த அளப்பரிய தியாகங்களை நன்றியுள்ள தமிழர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்!

ஃ

சி. ஜானகி,
உடுவில்.

கே:- வடக்கே பல்கலைக் கழகம் என்னுச்சு?

ப:- முடிந்த கதையாகி விட்டது!

கே:- அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுத் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டால் அடுத்த நடவடிக்கையென்ன?

ப:- உரிமைப் போராட்டமாகத்தான் இருக்கமுடியும்!

ஃ

செல்வி. எஸ். அஞ்சனு,
யாழ்ப்பாணம்.

கே:- ஒரு லட்சியம், கொள்கைபற்றி பேசிவிட்டு அதைச் செயலில் காட்டும் திறமை இல்லாதவர்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப:- இவர்களைப் பற்றித்தான் 'கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி நாட்டத்தில் கொள்ளாரடி' என்று பாரதி பாடி வைத்திருக்கிருனே!

ஃ

கோ. பி.
பண்டாரவளை.

கே:- பலநாள் திருடன்ஒருநாள் திருடனைக் காட்டிக் கொடுப்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- இதற்கு ஒரு அருமையான பதில் வைத்திருக்கிறேன்; ஆனல் அதைச் சொல்வதற்கு தணிக்கை அதிகாரி அனுமதிக்க மாட்டாரே!

ஃ

ச. திருநாவுக்கரசு,
கிரிலப்பனை.

கே. ''பொய்ப்பதி''யின் வாரமலர் சிங்கப்பூர்ப் பத்திரிகைகளை முழுக்க முழுக்கக் காப்பி அடித்து வெளியிடுவது சொந்தச் சரக்கு இல்லாததாலா? 'காப்பிமணி' என்று இப் பத்திரிகையை அழைத்தாலென்ன?

ப:- உங்கள் விருப்பம் போல அழையுங்கள்!

ஃ

இ. நடராசா,
மந்துவில்.

கே:- எமது கிராமத்தில் நாங்களும் சோசலிச வாதிகள் என்று கூறிக்கொள்ளும் ஒரு சிலர் மக்களுக்குள்ளே 'பிளவை' உண்டாக்குகிருர்களே... இவர்களை எப்படி அழைக்கலாம்?

ப:- 'சுயநலவாதிகள்' என்று அழையுங்கள்!

கே:- தீண்டாமையை ஒழிப்போம் என்று கூறும் இவர்களே சாதிக்குள் சாதி பார்க்கிருர்களே இதற்குப் பெயர் சோசலிசமா?

ப:- சோசலிச மல்ல— 'சோசலிசவிஷம்'!

கே:- தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தவர் வன்னியசிங்கமா செல்வநாயகமா?

ப:- இருவரும்!

ஃ

செ. யோகலிங்கம்,
கொழும்பு-6.

கே:- கவிஞர் காசி ஆனந்தனின் 'அண்ணகாவியம்' எப்போது மீண்டும் தொடங்கும்?

ப:- பத்திரிகை தணிக்கை நீக்கப்பட்ட பின்னர் ஆரம்பமாகி, தடையின்றி தொடர்ந்து வெளிவரும்!

ஃ

சு. குகதாசன்,
ஒட்டமாவடி.

கே:- கா. பொ. இரத்தினம் மட்டும்தாஞ வீரத் தமிழன்?

ப:- ஏன் உம்மை வீரத் தமிழனுக வேண்டாமென்று யாரையா தடுத்தது?

கே:- உடுப்பிட்டி பா. உ. ஜெயக்கொடி சம்பளத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டிருந்தால் போதுமா?

ப:- ஏன் சிலரைப்போல அவரும் 'கிம்பளம்' வாங்கவில்லையென்று வருத்தப்படுகிறீரா?

கே: சாவகச்சேரியில் காங்கிரஸ் வேட்பாளர் மகாவலி கங்கையை சாவகச்சேரிக்கு கொண்டுவருவேன் என்ருர் இப்போது அவர் எங்கே?

ப: மகாவலி கங்கை நீரை போத்தல்களில் அடைத்து வருகிருராம்!

ஃ

கிருஷ்ணசாமி
சாவகச்சேரி.

கே: காங்கிரஸ் வேட்பாளர்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தேர்தலுக்கு தேர்தல் தோன்றும் கழைக் கூத்தாடிகள் என்று கருதுகிறேன்.

ஃ

சி. பெ. மனேகரன்
நுகேகொடை

கே: இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் யாபேரும் ஒற்றுமைப்பட்டு தங்களுக்கு ஒரே ஒரு கட்சிதான் உண்டு அதுதான் தமிழரசுக்கட்சி என்ற நிலையை ஏற்படுத்தினல்...?

ப: தமிழர் உரிமைக் கோரிக்கைகள் வெற்றி பெறும்!

ஃ

சி. நடராசா
மீசாலை.

கே: கடந்த 25 வருடங்களாகத் தமது கட்சி கொள்கையை மாற்றவில்லை என்கிருரே ஆனந்த சங்கரி; எந்தக் கட்சி என்பது புரியவில்லையே?

ப: அது அவருக்கே தெரியாத சங்கதி!

கே: ஆனந்த சங்கரி, தியாகராசா ஆகியோர், அருளம்பலம் காங்கிரசா அல்லது பொன்னம்பலம் காங்கிரசா?

ப: அருளம்பலம் காங்கிரஸ்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

## (தலைப்பு தணிக்கை)

"எங்களைப் பொறுத்த அளவிலே நாங்கள் இந்த நாட்டிலே கள்ளத் தோணிகளாக இருக்கும் எவருக்காகவும் வாதாட மாட்டோம். அவர்களுடைய உரிமைக்காக இங்கே ஒரு வசனம் பேசவும் மாட்டோம். வேறு எந்த நாட்டினுடையவும் பிரசையாக இருக்கிறவர்கள் இந்த நாட்டில் வசித்தால் அவர்களுக்கு ஏதாவது உரிமை கொடுக்க வேண்டும்; சலுகை கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்க மாட்டோம். ஆனல் இந்த நாட்டிலே முக்கியமாக தேயிலை, இறப்பர் தோட்டங்களிலே வசிக்கும் பத்து லட்சம் மக்களின் நிலை, வேறு எந்த நாட்டிலும் இல்லாத ஒரு பரிதாபகரமான நிலையில் இருக்கிறது.

உலகத்திலுள்ள வேறு எந்த நாட்டிலும் நாடற்ற பிரசை என ஒருவனும் இல்லை. இங்கேதான் பல காரணங்களுக்காக இந்தப் பரிதாபகரமான நிலை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் அடிப்படை உரிமை சாசனம் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் பாதுகாப்புக் கொடுக்கிறது. அவன் எங்கு வசித்தாலும் அவனுக்கு அந்தப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனல் இந்த நாட்டில் நாடற்றவர்கள் என்ற நிலையில் வசிக்கும் மக்களின் நிலை மிகவும் மோசமானதாக, பரிதாபகரமானதாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய தேவையில்லை.

எங்களுக்கு மாத்திரமல்ல, தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுவதற்கு இந்தச் சபையிலே இருக்கும் ஒவ்வொரு கட்சிக்கும் உரிமை இருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தோட்டத் தொளிலாளர் மத்தியில் ஆயிரக் கணக்கான அங்கத்தவர்கள் இருக்கிருர்கள். லங்கா சமசமாஜக் கட்சிக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இருக்கிருர்கள். அதுபோலவே, கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இருக்கிருர்கள்; லங்கா சமசமாஜக் கட்சியின் தோட்டத் தொழிலாளர் தலைவர் இங்கே அமர்ந்திருக்கிருர். ஆகவே, உங்களுடைய தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த அடிப்படை உரிமை இருக்கப்படாது என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்று இந்தத் தொழிற் சங்க வாதிகளையும் தொழிற் சங்கத் தலைவர்களையும் கேட்க விரும்புகிறேன்"

—அரசியல் நிர்ணய சபையில் வி. என். நவரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர்களை ஏற்றி இறக்கும் வேலைக்கு முட்டுக்கட்டை போடப்படுவது அவசியம்!

## இன்றேல் நகர முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும்!

### நாடாளுமன்றத்தில் உடுவில் தர்மலிங்கம் பா. உ. உரை!

**அண்மையில் நாடாளுமன்றத்தில் உள்ளூரதிகார சபைகள் (சிறப் பேற்பாடுகள்) மசோதா விவாதிக்கப்பட்டபோது அதில் கலந்துகொண்டு உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் உரை நிகழ்த்தினார். அவரது உரை இங்கு இடம் பெறுகிறது.**

உப தலைவர் அவர்களே, எனக்கு முன்பு நகர சபைத் தலைவர் ஒருவர் பேசி இந்த மசோதாவை ஆதரித்து இருக்கிறார். மாநகர சபைத் தலைவர் ஒருவரும் பேசி இந்த மசோதாவை ஆதரித்து இருக்கின்றார். வேறு உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் இந்த மசோதாவை ஆதரித்துப் பேசி இருக்கிறார்கள். நான் இப்பொழுது உள்ளூராட்சி மன்றத் தலைவராக இல்லாவிட்டாலும் பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலே மிக விசேடமாகச் செயற்பட்டு வந்த உடுவில் கிராம சபை அங்கத்தவராகவும் தலைவராகவும் பல ஆண்டுகாலம் இருந்திருக்கிறேன். இந்தத் தருணத்திலே தமிழ் அரசுக் கட்சியின் சார்பிலே இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்,

இந்த மசோதாவிலே உள்ள எல்லாப் பகுதிகளையும் பூரணமாக ஆதரிக்க முடியாமல் இருந்தாலும் இந்த மசோதாவிலே மிகவும் சிறப்பான சில விஷயங்கள் உள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது; இந்த மசோதாவை ஐந்து, ஆறு பகுதிகளாகப் பிரித்து இருக்கின்றார்கள். இந்த மசோதாவிலே உள்ள பல அம்சங்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே இங்கே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்; இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் இப்பொழுது தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தபோதிலும் இது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு மசோதாவென பதில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**வரிகளை அறவிடமுடியும்**

உள்ளூராட்சி மன்றங்களில் ஒவ்வொன்றும் கட்டாயமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை காணிகளுடைய, கட்டடங்களுடைய ஆண்டு வருவாயைமதிப்பிட்டு அதற்கேற்ப வரிகளை விதிக்க வேண்டும் என்று இந்த மசோதாவின் முதலாவது பகுதியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மிகவும் வரவேற்கக்கூடிய ஒரு விடயம்.

ஏனெனில் இன்றைய நடைமுறையிலே உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் வரியைத் திருத்துவதற்கு முன்வருவது இல்லை. ஏனெனில் அந்தப் பொறுப்பை ஏற்று மக்களிடம் குறை கேட்கக் கூடாதென்று அவர்கள் கருதுவதே அதற்குக் காரணமாகும். இன்றைக்கு அரசாங்கம் இதை ஒரு கட்டாய சட்டமாகக் கொண்டு வந்திருப்பதால் வருங்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை, காணிகள், கட்டடங்கள் ஆகியவற்றின் வருவாயை மதிப்பிட்டு அதற்கேற்ப வரிகளை விதிக்கவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் தகுந்த வரிகளை அறவிட இந்த மசோதா வசதி அளிக்கின்றது. இதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வரவேண்டிய வருவாய் தவறாமல் வரும். வேண்டிய நேரத்திலே உள்ளூராட்சி மன்றங்கள் வருவாய்களை மாற்றி அமைக்காமல் விடுவதால் உள்ளூராட்சிமன்றங்களுக்கு வரவேண்டிய வரிகள் வராமல்போய்விடுகின்றன. இந்த மசோதாவினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியாயமாக வரவேண்டிய வரிகளை அறவிடுதல் மிகவும் இலகுவாக இருக்கும்.

**பண நெருக்கடியே காரணம்!**

வரிகளை அறவிடும் பொறுப்பை உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிடமிருந்து எடுத்து ஒரு உத்தியோகத்தரிடம் கொடுக்கப்படுகின்றது. இதுவும் வரவேற்கத்தக்க ஒரு விடயம் ஏனெனில் சாதாரணமாக உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அரசியல் அடிப்படையில் இயங்குவதால் அவர்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற்று இயங்குவதால் பணம் அறவிடும்போது ஒரு தயக்கத்தோடுதான் அந்தக் கடமையைச் செய்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்கள் தயவு தாட்சண்யம் காட்டாமல் வரிகளை அறவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிலும் பார்க்க ஒரு நல்ல சூழ்நிலையிலிருந்து வரிகளை அறவிட முடியும்; எனவே வரிகளை அறவிடும் பொறுப்பை மக்களால் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிடமிருந்து எடுத்து அதை உத்தியோகத்தர்களிடம் கொடுப்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கு நன்மையைக் கொண்டுவரும் என்று கூறவிரும்புகிறேன்;

உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு இருக்கின்ற பெரும் கஷ்டமான நிலை பண நிலைதான் என்பதை அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். இன்று உள்ளூராட்சி மன்றங்கள் திறம்பட இயங்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் போதிய பணமின்மையே. பணவசதியில்லாத காரணத்தால்தான் கிராம சபைகள் என்றாலும் சரி, நகரசபைகளென்றாலும் சரி, மற்றைய உள்ளூராட்சி மன்றங்கள் என்றாலும்சரி வேண்டிய நேரத்திலே, வேண்டியவற்றைச் செய்யமுடியாத ஒரு நிலை இருக்கின்றது.

இன்றைக்கு இங்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தம் மட்டும் போதாது. வேறு பல வரிகளையெல்லாம் உள்ளூராட்சி மன்றங்கள் அறவிடக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் தேடிக்கொடுக்க வேண்டும். யாழ்ப்பாணப் பகுதியைப் பொறுத்தவரையிலே அங்கே இருக்கின்ற மரவரியைகூட உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கொடுத்தால் விசேடமாக இருக்கும். அதனாலே ஏராளமான பணத்தை உள்ளூராட்சி மன்றங்கள் சேகரிக்கக்கூடியதாக இருக்கும். அந்த வரிகள் எல்லாம் சாதாரணமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய வரிகள். அந்த வரிகளை உள்ளூராட்சி மன்றங்களே அறவிடக்கூடிய சட்டங்களை விதிகளை அரசாங்கம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்;

பண நெருக்கடிதான் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மிக முக்கியமான ஒரு விடயம்; இதைத் தீர்த்து வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியாயமான அளவு நன்கொடைகள் வழங்குகிறார்கள். நன்கொடைகள் கொடுப்பதற்கான ஏற்பாடும் வரவுசெலவுத் திட்டத்திலே இடம்பெற்றிருக்கின்றது. அவற்றை வழங்கிவிட்டார்களோ என்னவோ எமக்குத் தெரியாது. இந்த நன்கொடைகள் மட்டும் போதாது. வரிகளையும் கொடுக்கக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் அளிக்கவேண்டும்.

**காணி கொள்வனவு**

அடுத்ததாக, காணிகொள்வனவைப்பற்றியும் இங்கே ஒரு பிரிவு குறிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்கள் தங்களுடைய அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை எந்தவிதமான தடையுமின்றி வாங்கக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் இப்பகுதியின் மூலம் அளிக்கின்றது. ஆனல் எதற்காக ஒரு குறிக்கப்பட்ட விலைக்குட்பட்ட காணிக்குத் தான் இந்தப் பகுதியைச் செல்லுபடியாக்கியிருக்கிறார்களென்று எனக்குத் தெரியவில்லை.

உடுவில் கிராமசபை தன்னுடைய சந்தையைவிஸ்தரிப்பதற்காக வருடக்கணக்கில் ஒரு காணியை வாங்கமுடியாத நிர்ப்பந்த நிலை ஏற்பட்டதைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். இப்படியான ஒரு சட்டம் இருந்தால் அந்த சந்தை விஸ்தரிப்பு வேலையை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் உடுவில் கிராமசபை செய்து முடித்திருக்கும் ஆகவே அந்தக் காணியினுடைய விலையைப்பொறுத்து இந்தச் சட்டத்தைப்பாவிக்கச் செய்வது அவ்வளவு நியாயமான ஒன்றாக எனக்குத் தோன்றவில்லை.

தங்களுடைய அவசிய தேவைகளுக்காத்தான் உள்ளூராட்சி மன்றங்கள் காணிகளை வாங்குகின்றன. நியாயவீனமான முறையில் அவைகள் காணிகளை வாங்குகின்றன என்று அரசாங்கம் நினைக்கக் கூடாது. உள்ளூராட்சி மன்றங்களுக்கு வாங்குவதற்குச் சக்தியிருக்குமென்றால் எந்த விலையான காணியையும், அவர்களுக்குத் தேவையான நேரத்திலே வாங்கும் வசதியை அரசாங்கம் செய்யவேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். அந்த விலை எல்லையையும் குறிக்காமல் விட்டால் நன்றாக இருக்குமென அமைச்சரவர்களுக்கு நான் சொல்லி வைக்க விரும்புகிறேன்;

**நன்மை விளைக்கும் சட்டம்**

அதுவும் இன்று இருக்கும் சூழ்நிலையில் காணிகளின் விலையைப்பற்றி நாம் கூறத் தேவையில்லை. அருவிலைவிற்கும் இந்த நேரத்திலே விலைக்கு ஒரு எல்லையை விதித்துவிட்டால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அது

(11ம் பக்கம் பார்க்க)

---

# விரியன் பாம்பை விரட்ட வீட்டைக் கொழுத்திய கதை!

## நாடாளுமன்றத்தில் நவம் கூறினார்!

'அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையிட்டு எனது தொகுதியிலுள்ள இளைஞர்களைக்கூட்டி கருத்தரங்குகள் நடத்துவது வழக்கம். அதில் நாங்கள் விவாதித்த பல பிரச்சினைகளில் ஒன்று, மூதவையை ஒழிக்கும் இம்மசோதாவைப் பற்றியது.

நீண்ட விவாதத்தின் பின்னர், 'ஐயா, இம்மசோதாவை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு சில காரணங்கள் உண்டு' என்று ஓர் இளைஞன் கூறினன். நான், அது என்ன என்று அவனிடம் கேட்டேன்.

திருமதி விவியன் குணவர்தன:— 'அவர்கள் உங்களை விட அறிவாளிகள்.'

நவம்:— 'எனது தென்னந்தோட்டத்திலிருந்த பங்களாவை உங்களுக்குத் தெரியுமா ஐயா' என்று அவன் என்னிடம் கேட்டான். நான் தெரியும் என்று கூறினேன்.

'நான் அதை அழித்து விட்டேன்'—இப்படி அவன் கூறினன்.

'ஏன் அதை அழித்தாய்? அது அழகான பங்களாவல்லவா? அது குடியிருக்கமட்டுமன்றி தேங்காய்களை சேமித்துவைக்கவும் பயன்பட்டதாயிற்றே'—இப்படி நான் கேட்டேன். அவன் கூறினன்—'அந்த மாளிகைக்குள் ஒரு விரியன் பாம்பு புகுந்து விட்டது'!

வேறு எவ்வழியாலும் அந்த விரியன் பாம்பைத் துரத்த அவனல் முடியவில்லை — விரியன்பாம்பை அழிப்பதற்காக முழுவீட்டையுமே அவன் கொழுத்த வேண்டியேற்பட்டது!

உறுப்பினர்கள்:— விரியன் பாம்பு யார்?

நவம்:— இதன் உட்பொருள் என்ன; மூதவைக்கும் விரியன் பாம்புக்கும் என்ன தொடர்பு என்று நான் அந்த இளைஞனைக் கேட்டேன். 'ஐயா மூதவை ஒழிக்கப்பட்டால் குமாரசூரியருக்குஎன்னநடக்கும்?' என்று அவன் கேட்டான். 'அவரும் பதவி இழக்க வேண்டிவரும் என்று நினைக்கிறேன்' என்று நான் பதிலளித்தேன்.

'இதுதான் நாங்கள் நடத்திய விவாதம்.

''என்னைத்தவருகயாரும் புரிந்துகொள்ள வேண்டாம் —எங்கள் நாட்டிலிருக்கும் இளைஞர்கள் செனட்டர் குமாரசூரியரை ஒரு விரியன் பாம்பு என்று அழைக்க விரும்புவார்கள் என்று நான் நினைக்கக்கூடவில்லை.

'பாம்பைத் துரத்துவதற்காக வீட்டையே அழிக்க வேண்டியிருந்தது — ஆகவே கெட்டவைகளை போக்குவதற்காக நல்லவைகளையும் அழிக்கத்தான் வேண்டும்' என்று அப்பையன் கூறினன்.

அருளம்பலம்:- அந்தப் பையன் யார்? வீடு எங்கேயிருக்கிறது?

சபாநாயகர்:- பையன் யார்? வீடு எங்கே என்றொரு கேள்வி கேட்கப்பட்டது. பொடியன்களை தேடித்திரிவதற்காக நாங்கள் இங்கே இருக்கவில்லை—

நவம்:- செனட்டர் குமாரசூரியர் பதவி இழந்து போவார் என்ற காரணத்துக்காக மூதவை ஒழிப்பை ஆதரிக்கவேண்டும் என்று இந்த இளைஞர் கூறியதற்கு காரணம் இருக்கிறது. நான் அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய நேரத்திலும் கூறினேன். நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக சில அதிருப்திகள் இருக்கின்றன; அந்த அதிருப்திக்கு காரணமானவர்களில் குமாரசூரியரும் ஒருவர் என்று; செனட்டர் குமாரசூரியருக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வித காழ்ப்பும்கிடையாது.

ஒரு உறுப்பினர்:- நீங்கள் அவரை விரியன் பாம்பு என்று கூறினீர்கள்!

நவம்:- நான் அவரை விரியன் பாம்பு என்று கூறவில்லை. நாங்கள் அரசியலில் நீண்ட நாட்களாக இருக்கிறோம். அரசியலில் கருத்து வேறுபாடு இருப்பதற்காக எந்த ஒரு மனிதரையும் நாங்கள் வெறுப்பதோ நிந்திப்பதோ கிடையாது. ஆனல், 'செனட்டர் குமாரசூரியரை வெளியேறச் செய்வதற்கு ஒரேவழி மூதவையை ஒழிப்பதுதான் என்றால்—மூதவை ஒழிக்கப்படட்டும்' என்று எனது தொகுதியிலுள்ள இளைஞரும் அவரைப்போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களும் கருதுவதற்கு தகுந்த காரணமுண்டு.

—நாடாளுமன்றத்தில் (21-5-71)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்க விடுதலைப் போர் வளர்ந்த வரலாறு (4)

# உடல் மண்ணுக்காக! உயிர் மொழிக்காக!!

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு உதயமான அரசியல்நிர்ணயசபையில் உறுப்பினர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்த பிறகு கொண்டுவரபட்ட முதல் தீர்மானம் என்ன தெரியுமா?

கிழக்கு. வங்கத்திலிருந்து வந்த ஒரு உறுப்பினர் எழுந்து அரசியல் நிர்ணய சபையை மேற்குப் பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் கூட்டுவதுபோல ஒருமுறை கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள டாக்காவிலும் கூட்ட வேண்டும்—என்கிற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

வங்க உறுப்பினர்கள் பலரும் அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

பீகம் இக்ரமுல்லா என்பவரும் அதை ஆதரித்துப் பேசினார்.

பிரதம மந்திரி லியாகத் அலிகான் அந்த அம்மையாரைப் பார்த்து கேலியாக ''பெண்கள் அன்றாட நிர்வாகக்கஷ்டங்களைத்தெரிந்து கொள்வதே இல்லை'' என்று கூறினார்.

கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த அந்த அம்மையார் வங்காளிகளுக்குரிய உணர்ச்சி வசப்பட்டு ''ஆம், உண்மைதான். அது எங்களுக்குத் தெரிந்திருந்தால் இன்று பாகிஸ்தானைப் பெற்றிருக்க மாட்டோம்!''—என்று கூறினார்.

—இந்தச் சம்பவம் பாகிஸ்தான் உதயமான சூட்டில் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டத்தில் விசுவாசப் பிரமாண நிகழ்ச்சி முடிந்த பிறகு நடைபெற்ற சம்பவமாகும்! இச் சம்பவமே கிழக்கிற்கும், மேற்கிற்கும் உள்ள பூகோள இடைவெளியையும், உணர்ச்சிகளின் வேறுபாட்டையும் காட்டுவதாக அமைந்திருப்பதைக் காணலாம்!

கிழக்குப் பாகிஸ்தான் மக்கட்தொகைஅதிகமாகஇருப்பதால் பாகிஸ்தானிலேயே அதிக மக்கள் பேசுகிற மொழி வங்கமொழியாகும்!

இதில் வேடிக்கை என்னவென்றால்: 1951-ல் எடுத்த மக்கள் தொகை புள்ளி விபரக் கணக்குப்படி இருபத்தி நான்கு லட்சம்பேர்தான் உருது மொழியை தங்கள் தாய் மொழி என்றுகூறியருந்தனர். இதில 7·3 சத விகிதத்தினர்தான் உருதுமொழியில் பேசக் கூடியவர்கள. (பாகிஸ்தானில்மொத்தமக்கட்தொகை சுமார்ஒன்பது கோடி)

—ஆனல் மதத்தின் பெயராலும் நாட்டின் ஒரு பகுதியின் ஆதிக்க உணர்ச்சியின் அடையாளமாகவும் உருது மொழியை அவசரப்பட்டு பாகிஸ்தானின் ஆட்சிமொழியாகப் பிரகடனம் செய்தார்கள்!

முன்பே குறிப்பிட்டிருந்ததுபோல வங்காளிகள் சாதி—மத — பேதங்களுக்கு அப்பாற்பட்டு மொழியின்மீது காதல்—அல்ல; அல்ல; வெறி கொண்டவர்கள்.

இவ்வளவிருந்தும் இதர பகுதியிலிருந்த முசுலிம்கள் போல் அல்லாது கிழக்கு வங்க முசுலிம்களில் நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பதுபேர் 1946 தேர்தலில் பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

உருதுமொழி ஒன்றுக்குத்தான் மகுடம் சூட்டப்படும் —என்று அறிவிக்கப்பட்டதும் அவர்கள் ஏமாற்றப்பட்டதாகவும், முதுகில் குத்தப்பட்டதாகவும் உணர்ந்தார்கள்.

ஒரு மொழி பிரித்தெடுக்கப்பட்டு அது நாட்டின் ஆட்சிமொழி என்னும் தகுதியை அடையுமானல் இதர மொழிகள் மெல்ல மெல்லச் சாகும் என்பதை உணர்ந்த வங்காளிகளிடையே எதிர்ப்புணர்ச்சி மூண்டெழுந்தது!

அப்படி உருது எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஈட்டி முனையாக மாறியவர்கள் மாணவ சமுதாயத்தினர்தான்!

## வங்காள உணர்ச்சியின் அடித்தளம் ரவீந்திரநாதரின் வீரமிகு கவிதைகளே!

1948 பிப்ரவரி மாதம் கிழக்கு வங்கம் முழுதும் உருதுமொழித் திணிப்பிற்கு எதிராகவும், வங்க மொழிக்கு ஆதரவாகவும் மாணவர் கிளர்ச்சிகள் வெடித்துக் கிளம்பின!

அப்போதுதான் புதுநாடு உருவாகியிருக்கிறது!

அந்த வெற்றிபோதை இன்னும் தணிந்தபாடில்லை!

—இந்தச்சூழ்நிலையில்உருது எதிர்ப்புக் கிளர்ச்சி மாணவ சமுதாயத்தோடு நின்று விட்டிருந்தது!

அதைவிட மேலாக தேசப் பிதாவாகக் கருதப்பட்ட ஜின்னாவின் செல்வாக்கும், கீர்த்தியும் அப்போது கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த காரணத்தால் அந்த நேரம் கிளர்ச்சி பரவாமல் தடுக்க முடிந்தது.

இருந்தாலும் உருது மொழித் திணிப்பிற்கு எத்தகைய எதிர்ப்பு இருக்கிறது என்பதை மாணவ சமுதாயம் ஜின்னாவிற்கு எடுத்துக் காட்ட முன் வராமலில்லை.

1948 மார்ச் திங்களில் தன்னுடைய சொந்த செல்வாக்கினல் கிளர்ச்சியை அடக்க கிழக்கு வங்கத்தில் ஜின்னா சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

டாக்கா பல்கலைக்கழகத்தில் தேசத்தின் பிதா பட்டமளிப்பு விழா சொற்பொழிவு நடத்தியபோது மாணவர்கள் அதைக் கேட்க மறுத்துவிட்டார்கள்.

கிழக்கு வங்கத்தில் பல பேரூர்களிலும் சிற்றூர்களிலும் மாணவர்கள் தங்கள் உருது மொழித் திணிப்பு எதிர்ப்பைக் காட்டுவதற்காகத் தங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருந்த ஜின்னாவின் படத்தை அப்புறப்படுத்தினர்கள்.

வங்காளிகளின் உணர்ச்சிகளை அறிந்து கொள்ளாமல் ஜின்னாவிற்குப் பின்னல் வந்தவர்கள் உருதுமொழித் திணிப்பில் தனித் தீவிரம் காட்டினார்கள்!

1952ம் ஆண்டில் வங்க மொழி வரலாற்றிலும் பாகிஸ்தான் வரலாற்றிலும் ஒரு முக்கிய கால கட்டமாக உருவெடுத்தது.

தாய்மொழிக்கு ஆபத்து என்பதை உணர்ந்த பிறகும் பொங்கி எழாதத் தக்கை மனிதர்களா வங்காளிகள்? —என்கிற அறைகூவலுக்கு ஒவ்வொரு வங்காளியும் பதில் சொல்லவேண்டியவன் ஆனன்!

1952—ல்தான் பாகிஸ்தான் மத்திய அரசுமேலும் ஒரு முட்டாள்தனமான முடிவை எடுத்தது!

குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறித்

'முரசொலி'

**மாறன் எம்.ஏ.எம்.பி.**

தது என்று பழமொழி சொல்வார்களே; அதைப்போல உருது மொழியை ஆட்சி மொழியாக்கிய மத்திய அரசாங்கம் வங்கமொழியை உருது எழுத்துக்களில் எழுத வேண்டும் என்கிற முறையை புகுத்தியது!

இந்த முடிவு வங்காளிகளின் தாய்மொழிப்பற்று என்கிற பெற்ரோல் கடலில் தீக்குச்சியைக் கிழித்து வீசியதைப் போல ஆகிவிட்டது!

வங்க முழுமையும் தாய் மொழிக் கனல் கொழுந்து விட்டு எரியலாயிற்று!

இந்த முறையில் தவறினல் தாய்மொழியைக் கடவுளே வந்தாலும் காப்பாற்ற முடியாது—என்பதை ஒவ்வொரு வங்காளியும் உணர்ந்தான்!

தாய்மொழிக்குத் தீங்கு வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ? —என்று சங்க நாதம் எழுப்பி வங்காளிகள் மத்திய அரசாங்கத்தை எதிர்த்து மொழிப்போரில் குதித்தனர்!

அத்தகைய ஆர்ப்பாட்டம் ஒன்றிலேதான் இப்போது விடுதலைச் சிங்கநாதம் கிளப்பும் முஜிபுர் ரகுமான் சாதாரண தொண்டராக இருந்து மொழிக் கிளர்ச்சியில் கலந்து கொண்டபோது கைது செய்யப்பட்டார்!)

ஆனல் ஜின்னாவின் தனித் தலைமை பாகிஸ்தானுக்கு நீடித்து நிலைக்காத துர்ப்பாக்கியம் ஏற்பட்டது!

1948-ம் ஆண்டு செப்டம்பர் 14-ம் நாள் பாகிஸ்தான் எனும் தனிநாடு உருவாக்கப்பட்டு; உருது மொழியை ஆட்சிமொழியாக்கியதன் மூலம் அதன் சீர்குலைவிற்கான விதையையும் தன்னையறியாமல் ஊன்றிவிட்டு ஜின்னா காலமானார்.

உடல் மண்ணுக்கு; உயிர் தாய்மொழிக்கு!—என்பது ஒவ்வொரு வங்காளியும் செய்து கொண்ட வீர சபதமாயிற்று!

பாகிஸ்தான் தலைநகரான கராச்சியில் வீற்றிருந்த அதிகார வர்க்கத்தாரும், கிழக்கு வங்கத்தின் தலைநகராம் டாக்காவில் கராச்சி பாட்டுக்கெல்லாம் தாளம் போட்டுக் கொண்டிருந்த அவர்களது எடுபிடிகளும் தாங்கள் ஒரு எரிமலைமீது வீற்றிருந்ததை அறியாதவர்களாக இருந்தார்கள்.

அந்த எரிமலை 1952-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி வெடித்துத் தீக்குழம்பைக் கக்கியது!

டாக்கா நகரில் எந்தவித ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுமல் தடுக்க 144 தடையுத்தரவு பிறப்பித்தார்கள்;

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை — என்று சிந்துபாடிக்கொண்டு ஆயிரமாயிரம் வங்காளிகள் மொழிப்போரில் ஈடுபட்டனர்!

மறுநாள் டாக்கா நகரெங்கும் தடையுத்தரவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள்! ஊர்வலங்கள்!

உலகில் எந்த நாட்டில் மொழியுரிமைப் போராட்டத்திற்கு எந்தத் 'தடையுத்தரவு' தடையாக இருந்திருக்கிறது?

பொலீசார் மிருகத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ஆனல் அதிகார பூர்வமான செய்திகள் உயிர்ச்சேதத்தையும். பொருட்சேதத்தையும் குறைத்து மதிப்பிட்டன.

அன்றைய தினம் மாத்திரம் இருபத்தி ஆறு மாணவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் துறந்தார்கள்! சுமார் நானூறுக்கும் அதிக மானவர்கள் காயமடைந்தார்கள்!

பிப்ரவரி 21 — வங்காளிகள் வரலாற்றில் ஒரு 'ஜாலியன் வாலா பாக்' — ஆக மாறிற்று!

அன்று முதல் இன்று வரை வங்காளிகள் அந்த நாளை 'தியாகிகள் தினமாக'க் கருதி மொழிப் போரில் உயிர்நீத்த வீரர்களுக்குத் தொடர்ந்து அஞ்சலி செய்து வருகிருர்கள்

வங்காளிகளின் மொழி உணர்வு கேட்கக் கேட்க வியக்கத் தக்கதாக இருக்கிறது!

இந்தியர்களை வெறுக்கும் மேற்கு பாகிஸ்தானியர் உணர்ச்சிகளுக்கு மாருக கிழக்கு பாகிஸ்தானில் வாழ்வோர் வங்கக் கவிச் சக்கரவர்த்தியாம் ரவீந்திரநாத் தாகூரைத் தெய்வமாகக் கவிஞராகப் போற்றிப் புகழ்கிருர்கள்!

(11-ம் பக்கம் பார்க்க)

## உணர்ச்சியூட்டும் வங்கக் கவிதை!

கொத்துக்கறிபோல என் சதையைத்
துண்டு துண்டாகக் கொத்திக் கூறுபோட்டாலும்
— என் சதையின் — இரத்தத்தின் —
ஒவ்வொரு அணுவும்
வங்கம் — வங்கம் என்றே முழங்கும்!
என் இதயத்தில் சுரக்கும் அன்பு வேதனையும்
துக்கமும் மனச்சாந்தியும்
வங்காளியாகவே இருக்கும்!

* * *

தூங்கிக் கொண்டிருந்தாலும், விழித்துக் கொண்டிருந்தாலும்
உட்கார்ந்தாலும், நின்ருலும்;
கூடியிருந்தாலும், பிரிந்து இருந்தாலும்;
என் இதயத்தின் அடித்தளம் வரைக்கும்
முழங்கிக்கொண்டிருப்பது ரவீந்திரருடைய குரல்தான்!
அவருடைய மொழிதான்

அவருடைய மொழிதான்
எங்கள் உணர்ச்சிகளின் கையைப்
பிடித்து அழைத்துச் செல்கிறது —

எங்கள் வீட்டுக்கு வெளியே
உலகெங்கிலும் வாழும் அந்நியரின் வீட்டுக்குள்ளே
அவர்களோடு நட்புறவு கொள்வதற்காக

அவருடைய மொழிதான்
எங்கள் உணர்ச்சிகளின்
கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறது!

அவருடைய மொழிதான்
நாஙகள் எடுத்துவைக்கிற ஒவ்வொரு அடிக்கும்
வழிகாட்டியாக இருக்கிறது!

எதிரிகளின் தாக்குதலால் நாங்கள்
பின்வாங்கவேண்டியிருக்கிற நேரத்திலும்
அவருடைய மொழிதான் வழிகாட்டியாக இருக்கிறது!

* * *

எங்கள் உதடுகள் அசைந்தாலும்;
நாங்கள் மௌனமாக இருந்தாலும்;

எங்கள் மூளையின் ஒவ்வொரு அணுவிலும்
எங்கள் இதயத்தின் சந்துபொந்துகளிலும்

சஞ்சாரம் செய்துகொண்டிருப்பது எங்கள்
ரவீந்திரநாத்தின் மொழிதான்!

இந்த மொழியும் ரவீந்திரநாத்தும் ஒன்றுதான்!
நாங்களே வங்கமாக இருக்கிறேம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமா உத்தமியா?

இவ்வாரச் சிறுகதை

அரியாலையூர்

**வீ. எம். குமார்**

**உமா** உத்தமியாம். ஏனென்றால் அவள் முறையாக - உலக சம்பிரதாயப்படி திருமணம் செய்துகொண்டு - ஊரார் மெச்ச குடியும் குடித்தனமுமாக வாழ்கிறாளாம். அது சரி. இந்தக் குருட்டு உலகத்தின் கண்களில் எல்லோரும் உத்தமிகளே!— உலகத்துக்குத் தெரியுமா சேகர் என்ற ஒரு பிறவி உலகில் சிவிப்பதும், அவன கண்களில் இருந்து ஆறாகத் தண்ணீர் பாய்வதும். நான் எழுத்தாளன் ஐயா. உலகத்திலிருந்து வேறுபட்டவன் — ஒளி படைத்த திறந்த கண்களால் உலகத்தைப் பார்க்கும் புனித ஜீவன் நான் — உமாவைப் பற்றிச் சொல்கிறேனே.

* * *

அழகுத் தெய்வத்துக்குச் சிறப்பாக இருக்கவேண்டிய அத்தனை எழில் அழகும் ஒருங்கே அமையப்பெற்ற சிற்பி செதுக்காத பொற்சிலையாள் அவள். பார்ப்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அப்பேரழகுப் பருவ மங்கை ஒடுங்கிய பாதையின் ஓரமாக அன்னத்தைப் போன்ற வண்ண நடை தவழ வீதி வழியே நடந்து செல்கின்றாள்.

அவள் நிலை தாய் தந்தையருக்கும் சகோதரர்களுக்கும் உழைத்துக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது. எழில்மிக்க குமரிப் பெண்ணான உமா குடும்பத்தின் ஏழ்மையைப் போக்கவே இத்திரா நெசவாலையை நோக்கிச் செல்கின்றாள்.

நிரந்தரமான ஒரு வேலை கிடைக்காது வாழ்க்கையில் வெறுப்படைந்த சேகர் தற்காலிகமாகத் தான் கடமையாற்றும் தொழிற்சாலையை நோக்கி கவலையுடன் வருகின்றான். வழியில் எதிர்பாராது உமாவைச் சந்தித்ததும் கண்ணிமைக்காது அவளையே உற்றுப் பார்க்கின்றான்—அவனால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. காரணம் தான் இரண்டு வருடங்களுக்கு முன் பார்த்த உமா இவ்வளவு அழகாகக் காட்சி தருவாளென அவன் சிறிதும் கருதவில்லை.

பொன்னிற மேனியும் மோகனப் பார்வையும் கம்பீரமான உடற்கட்டும் கொண்ட உமாவின் தோற்றம் அவன் உள்ளத்தைத் தொட்டது. அவளது அன்புப் பார்வை அவனைக் காந்தம்போல் கவர்ந்தது. ஒருவரை ஒருவர் விழிகளால் நோக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இருவரும் தாம் நிற்பதை உணர்ந்து பிரிந்து நகர்ந்தார்கள்.

வீதியில் சனங்களின் நடமாட்டம் உமாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தியதால் அவள் நாணத்துடன் சென்றுகொண்டிருந்தாள்.

சேகரது உள்ளத்தில் கடந்தகால வாழ்க்கை பசுமையான பல சம்பவங்களை நினைவூட்டியது.

சேகரும் உமாவும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்காதிருந்தபோதிலும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்திருந்தார்கள். சேகர் ஆசிரியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தான்.

உமா மட்டும் குறைந்தவளல்ல, கல்லூரியில் சிறந்த ஆடல் அழகியாகவும், சங்கீத ஞானம் உடையவளாகவும் பிரகாசித்தாள்.

அவளது அழகில் மயங்கிய பல மாணவ உள்ளங்கள் அவளை அரவணைக்கத் துடித்தன. ஆனால் பண்புமிக்க உமா ஒழுக்கத்தைப்பேணி நடந்து தன் மதிப்பையே உயர்த்திக்கொண்டாள். சிரித்து நடந்தாளே தவிரச் சிரிக்க நடக்கவில்லை.

சிந்தனையுடன் சென்றுகொண்டிருந்த சேகர் உள்ளத்தில் உமாவின் சிறந்த ஒழுக்கமும், நற்பண்புகளும் பூத்துக்குலுங்கும் நிறைந்த அழகும் புதிய உணர்வுகளை ஏற்படுத்தியது. அவளது களங்கமற்ற அன்புப்பார்வை அவன் இதயத்தில் காதல் விதையாக முளையிட்டது.

சந்தர்ப்ப வசத்தால் இருவரும் வேலைக்குப்போகும் நேரத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் சூழ்நிலை எப்படியோ மறுநாளும் ஏற்பட்டு விடுகிறது.

முதல்நாள் சேகருக்கு ஏற்பட்ட உணர்வலைகள் உமாவின் உள்ளத்திலும் அன்று தோன்றியிருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவது போல் மறுநாளும் அவளது செவ்விதழ்கள் மலர வெண் முத்துக்கள் பிரகாசித்தன. சேகர் அவள் உள்ளத்தைப் புரிந்தவனாக மகிழ்ச்சியுடன் சிரித்தான்—விழிகள் அன்புடன் தழுவிக்கொள்ள இருவரது உணர்வுகளும் சங்கமமாகின.

கல்லூரியில் படித்தகாலத்தில் இருவரும் சந்தித்தபோது ஏற்படாத உணர்வுகள், இரண்டு வருடங்களுக்குப்பின் சந்தித்த இரண்டு நாட்களில் இணைந்துமலர்ந்த சக்தியை இயற்கையின் நியதி என்றுதான் கூறமுடியும்.

இணைந்துகொண்ட காதலர்கள் தமது கல்லூரி வாழ்க்கையில் நடந்த மறக்கமுடியாத பசுமையான சம்பவங்களைப் பேசி மகிழ்ந்தார்கள். வீதியில் வெகுநேரம் தொடர்ந்து கதைக்க முடியாத காரணத்தால் தமது அன்புப் பரிமாறலைக் கடிதங்கள் மூலம் பரிமாறிக் கொண்டார்கள்.

காதல் செழிப்புடன் வளர்ந்தது. சேகர், உமாவைத் தனிமையிற் சந்தித்து தமது எதிர்கால வாழ்க்கையைப்பற்றி மனந்திறந்து கதைக்க வேண்டுமென விரும்பினான்.

அதற்கு ஏற்ற இடமாக உமாவின் வீட்டருகில் இருக்கும் சிறிய தென்னந் தோட்டத்தைத் தேர்ந்துகொண்டான்.

இரகசியமாக இரவினில் சந்திப்பது என்பது சுவைமான தொன்றல்ல. இருந்தாலும் எப்படியும் உமா இதற்குச் சம்மதிப்பாள் என்ற நம்பிக்கையுடன் அவளது சம்மதத்தைப் பெறத் தன் எண்ணத்தைக் கடிதத்தின் மூலம் உமாவுக்குத் தெரிவித்தான்.

கடிதத்தைப் படித்து உமா மகிழ்ச்சியுற்றாள். மறுநாளே தன் மன நிலையை தன் அன்புக் காதலனுக்குப் பதிலாக எழுதினாள்...

என் உயிருக்கும் மேலாகப் போற்றும் அன்பருக்கு,

தங்கள் கடிதத்தைப் படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். உங்களுக்காகவே நானும் எனக்காகவே நீங்களும் பிறந்திருக்கிறோம். இதை யாராலும் பிரிக்கமுடியாது. வாழ்ந்தால் உங்களுடனேயே வாழ்வேன் இல்லையேல் காலமெல்லாம் கன்னியாகவே இருப்பேன். எது எப்படி இருந்தாலும் காலம் நம்மை ஒன்றுசேர்த்து வைக்கும் என்பது உறுதி.

நாளை இரவுதோட்டத்தில் சந்திக்குமாறு எழுதியிருக்கிறீர்கள் உங்கள் மன ஆவல் எனக்கும் உள்ளதுதான். அதற்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை சரியாக வர வேண்டுமே! தற்சமயம் வீட்டாரிடம் பிடிபட்டுக்கொண்டால் என்பதை நினைக்கும்போது பயமாகவே இருக்கிறது.

எதற்கும் முயற்சிக்கிறேன் நீங்கள் குறிப்பிட்ட இடத்துக்கு இன்று வாருங்கள்.

இங்ஙனம்
தங்கள் காதலி
உமா

உமாவின் பதில் கிடைக்கப்பெற்ற சேகர் அவளுக்கு எழுதிய குறிப்பிட்ட நேரத்தில் அத்தோட்டத்தின் எல்லையைத் தாண்டி உள்ளே சென்றான்.

இருள் சூழ்ந்திருந்த அத்தோட்டத்துள் எங்கும் ஒரே நிசப்தமாகவே இருந்தது. அவன் எதிர்பாராதவிதமாக அத்தோட்டத்துள் நின்ற நாய் அவனைக் கண்டு குரைத்து அமைதியைக் குலைத்தது. நாயின் பயங்கர ஓசையைத் தொடர்ந்து 'ராசன் ராசன்' என்ற உமாவின் இனிய குரல் மெதுவாக ஒலித்து நாயைப் பணியச் செய்து அமைதியை ஏற்படுத்தியது.

உமா ஏற்கெனவே தோட்டத்துள் வந்து சேகருக்காகக் காத்திருந்தாள். அவளுடன் அவர்களது நாயும் கூடவே உமாவுக்கு உதவியாக நின்றது என்பதைப் புரிந்துகொண்டவனாக அவள் அருகே சென்றான் சேகர்.

'உமா பயந்துவிட்டீரா?' எனக்கேட்டான்.

'இல்லை' எனக்கூறி நாணத்துடன் தலை குனிந்து மௌனமாக நின்றாள்.

சேகரைச் சந்திக்கும் மற்றய நாட்களைவிட அன்று அவள் புதுப் பெண்ணாகவே எண்ணங்கள் தடுமாற—பெண்மையின் இயல்பான நாணத்தின்மை பிரதிபலிக்க வன்னப் பொலிவுடன் நின்று அவனை வரவேற்றாள் உமா.

சேகர் அன்புடன் அவளை மெதுவாக அணைத்தவண்ணம் தான் கொண்டு சென்ற தனக்குப் பிரியமான நறுமணம் கமழும் மல்லிகை மலர்களை அவளிடம் கொடுத்து, ரோஜா மலர் போன்ற அவளது அழகிய கன்னத்தில் அன்பு முத்தமும் கொடுத்தான். நாணத்தில் மிகுதியால் அவள், 'விடுங்களேன்' என்று இனிமை பொழிய அவனுக்குக் காதல் போதை ஊட்டினாள். அவன் அவளை இறுகத் தழுவிக் கொண்டான்—ஒன்றுபட்ட உள்ளங்கள் இன்ப வெள்ளத்தில் நீந்தி மகிழ்ந்தன.

இது போன்று பல இரவுகள் இருவரும் சந்தித்து அன்பொழுகப் பேசிமகிழ்ந்து இன்ப இரவாகக் கழித்தார்கள்.

'காதலினால் மானிடர்க்குக் கவலை தீரும் ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே' எனப்பாடிய பாமன்னன் பாரதியின் கூற்று சேகரைப் பொறுத்தவரை உண்மையாகவே இருந்தது.

அவனது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களில் தன் காதலி உமா பங்கு கொண்டு ஆறுதல் கூறுவதால் அவ்வப்போது அவன் தன் துன்பங்களை மறந்து அமைதி பெறுவான். பாரதி கண்ட காதல் தலைவியே தனக்குக் கிடைத்துள்ளாள் எனத் தன்னுள் எண்ணி மகிழ்ந்து கொள்வான்.

காலம் நகர்ந்தது. காதலையும் இருமலையும் மறைக்க முடியாதென்பதற்கு ஒப்ப—நான்கு வருடங்களாக வாழ்ந்துகொண்டிருந்த இவர்களது காதல் வாழ்க்கை எப்படியோ ஊராருக்குத் தெரிந்து விட்டது. ஆனால், இரவினில் சந்தித்துப் பழகும் சம்பவம் சேகரின் நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

ஊரார் தெரிந்துகொண்ட காதல் விவகாரம் உமாவின் பெற்றோருக்கும் தெரியவந்தது. உமாவின் தந்தை தன் மகள் சேகரை விரும்புவதை வெறுத்தார்.

மகளை வன்மையாகக் கண்டித்ததுடன் நெசவாலைக்கும் போகவிடாது தடுத்து வீட்டிலேயே அவளை அடங்கிக் கிடக்கும்படி செய்துவிட்டார். இதனால் இவர்களது தொடர்பு துண்டிக்கப்பட்டது.

சேகருக்கு உத்தியோகம் இல்லையென்ற ஒரே காரணத்தினாலேயே உமாவின் தந்தை சேகரை வெறுத்தார். தன் மகளுக்கு உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையாகப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டுமென துடியாய் துடித்தார். அவசர அவசரமாகத் தன் உறவினரது உதவியுடன் உமாவுக்கு வரன் தேடினார்.

இந்நிலையில் சேகரைத் தமது மாப்பிள்ளையாக ஆக்கிக்கொள்ள விரும்பிய சிலர் சேகரிடம், உத்தியோகம் எடுத்துத் தருவதுடன் நல்ல சீதனமும் தருகிறோம் தமது பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்டார்கள்.

ஆனால் சேகரோ, நிலையற்ற பணத்துக்காக, பதவிக்காக அழியாத அன்பைத்தான் உமாமீது கொண்ட களங்கமற்ற காதலைக் காசுக்கு விற்கும் கயவனாகாது அவற்றை ஏற்க மறுத்தான். உமாவையே திருமணம் செய்து அவளுடனேயே இன்பமாக வாழவேண்டும் என்ற உறுதியான அன்பு அவன் உள்ளத்தில் நிலைத்திருந்தது.

தந்தையின் கண்டிப்பினால் உமா வீட்டைவிட்டு எங்குமே செல்லாது அமைதியாக இருந்துவிட்டாள். இருவரும் தொடர்பு கொள்ள முடியாது கவலையுற்றார்கள்.

காதலைவிட இனிமையானதொன்று இவ்வுலகில் இல்லை என்பார்கள். ஆனால், அக்காதலுக்கு ஊறு ஏற்படும்போது அடையும் துன்பத்திற்கும் எல்லை இல்லை என்பதை உணர்ந்தார்கள். வருந்தினார்கள்.

இவர்கள் நிலை இப்படி இருக்கும்போது உமாவிற்கு வரன் தேடிய உறவினர் பக்கத்துக் கிராமமாகிய புளியங்குழியில் வசிக்கும் பஸ் கெண்டக்ரர் கணேசன் என்பவனை உமாவுக்கு மணம் செய்ய எண்ணினார்கள்.

கணேசன் பெயருக்கு மட்டும் கணேசனே தவிர செயலில் அவன் கயவனே! அவன் தன் இச்சைக்கு இசைந்த பெண்களைக் கெடுத்துவிட்டு நல்லவன் போல் 'நடிப்பதில்' நடிகர் திலகத்தையும் மிஞ்சி விடுவான். தாய் தந்தையருக்கு அவன் ஒரே பிள்ளையாக இருந்ததால் அவர்களது சொத்துக்கு அவனே வாரிசாக இருந்தான்.

பெண்வீட்டார் கணேசனிடம் திருமணப் பேச்சை நடத்தினார்கள். உமாவைக் கணேசனுக்கு ஏற்கெனவே தெரியும். அவள் அழகான பெண் என்பதும் அவனுக்குத் தெரியும்.

ஊராருக்குத் தெரிந்த உமாவின் காதல் நாடகமும் கணேசனுக்குத் தெரியாமலில்லை. சேகரும் உமாவும் காதலர்கள் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

உமா அழகான பெண் அவளைத்தான் மணந்து கொண்டால் என்ன என்று எண்ணினானே அன்றி அவள் வேறொருவனால் நுகரப்பட்ட கசங்கிய மலர் என்பதில் அவனுக்கு எள்ளளவும் கசப்போ வெறுப்போ ஏற்படவில்லை.

ஒரு ஆடவன் தான் திருமணம் செய்யவிருக்கும் பெண்ணிடம் எதை முதலில் எதிர்பார்ப்பான்? களங்கமற்ற பெண்மையைத்தான் எதிர்பார்க்க முடியும். ஆனால், எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் பெண் அழகாக மட்டும் இருந்தால் அதுவே போதும் என்று கூறும் கணேசனைப் போன்ற ஆண்மையற்ற அற்ப மனிதப் பிறவிகளும் சமுதாயத்தின் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உமாவை மணம்புரிய கணேசன் தன் சம்மதத்தை அவளின் உறவினரிடம் தெரிவித்தான்.

கணேசனின் முடிவைத் தெரிந்து கொண்ட உமாவின் பெற்றோரும் உறவினரும் உமாவின் சம்மதத்தைப் பெறவிரும்பி கணேசனின் சொத்துக்களின் விபரத்தையும், வேலையையும் எடுத்துக் கூறி கணேசனை மணந்து கொள்ளுமாறு தூண்டினார்கள்.

உமாவின் உள்ளம் நிலை தடுமாறியது! மாறுபட்ட உணர்ச்சிகள் உதயமாகின; ஆசைகள் அலை மோதின; சேகருடன் தான் அன்பு பூண்டு உறவாடிய சம்பவங்கள் அவனுக்குத் துரோகம் நினைக்கக் கூடாதென உமாவை உறுத்தித் தடுக்கத்தான் செய்தன—ஆனால் மாறுபட்ட உணர்ச்சிகளும், ஆசைகளும் புனிதமான காதலை வாழவைக்கவிடாது அழித்தன.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தமிழரின் வரலாற்றுக் கருவூலமான

# சிலம்பை இழிவுபடுத்துவதா?

### அந்தப் பழியைத் துடைத்து புகழைக் காத்திருக்கிருர் ம. பொ. சி.

**'கோவலன் குற்றவாளியா?' நூல் வெளியீட்டுவிழாவில் கலைஞர் மு. க.**

அண்மையில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இளங்கோ விழாவில் 'சிலம்புச் செல்வர் மா.பொ.சி. எழுதிய 'கோவலன் குற்றவாளியா?' என்ற நூலை வெளியிட்டு தமிழக முதல்வர் கலைஞர் மு.க. அவர்கள் பேசியதன் சாரம் இங்கு தரப்படுகிறது.



இன்றைய இளங்கோவடிகள் விழாவில் சிலம்புச்செல்வர்அவர்கள் எழுதிய 'கோவலன் குற்றவாளியா? என்ற நூலினை வெளியிடுகின்ற நல்ல வாய்ப்புக் கிடைத்தமைக்காக— இந்த வாய்ப்பை எனக்களித்த ஏ. பி. நாகராசன் அவர்கட்கும், நூலை வெளியிட்ட இன்ப நிலையத்தாருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''கோவலன் குற்றவாளியா? என்று கண்ணகி பாண்டியன் அவையிலே கேட்டு, அவன் குற்றவாளியல்ல என்று பாண்டியனே ஒப்புக்கொண்ட பிறகு இப்பொழுது சிலம்புச் செல்வர் ஏன் இந்தப் புதிய பிரச்சினையைக் கிளப்பியிருக்கிருர் என்று இன்று மாலையில் என் கைக்கு இந்த புத்தகம் கிடைத்ததும் தலைப்பைப் பார்த்தவாறு கேட்டுக் கொண்டே இந்தப் புத்தகத்தைப் பிரித்தேன். பிரித்துப் படித்த பிறகுதான் எதிலுமே அவசரம் கூடாது என்று என் மனசாட்சி எனக்குப் பதிலளித்தது.

வீட்டிலே படிக்கத் தொடங்கிய இந்நூலை இங்கே ஏ. பி. நாகராசன் பேசிக் கொண்டிருந்த நேரத்திலும், விழாத் தலைவர் ஔவை டி. கே. சண்முகம் உரையாற்றிய நேரத்திலும், டாக்டர் சஞ்சீவி சொற்பொழிவாற்றிய நேரத்திலும் படித்து முடித்துவிட்டேன்.

**அட்டாவதானம்!**

அவர்கள் என்னைத் தவருக கருதக்கூடாது, தங்களுடைய பேச்சைக் கவனிக்காமலேயே இதைப்படித்து முடித்திருக்கிருனே என்று! அவர்களுடைய பேச்சையும் கவனித்தேன். திரும்ப அவர்கள் பேசியதைச் சொல்லச் சொன்னுல் மீண்டும் நான் சொல்லுவேன்.

இடையிடையே சிலம்புச் செல்வரோடும் உரையாடிக் கொண்டிருந்தேன். என்னென்ன பேசினுய் என்று அவர் என்னிடத்தில் கேட்டால் திரும்பவும் அவரிடம் சொல்வேன். இவ்வளவுக்கும் மேலாக இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாயே இந்தப் புத்தகத்தை ஒழுங்காகப் படித்தாயா என்று கேட்டால் எந்த இடத்தில் எதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று அவர்கள் என்னிடத்தில் பரீட்சை வைத்தாலும் அந்தப் பரீட்சையிலே வெற்றி பெறக் கூடிய அளவுக்கு இதைப் படித்து முடித்திருக்கிறேன்; ஏனென்ருல் சில ஆண்டுகளாக அட்டாவதானம் செய்து பழக்கப்பட்டுவருவதால் இந்தப் பணியினை என்னுல் செய்ய முடிந்தது.

சிலம்புச் செல்வர் அவர்கள் இந்நூலின் முன்னுரையிலேயே குறிப்பிட்டிருக்கிருர்கள், இன்றைய தினம் இலக்கியம் சார்ந்த பட்டிமன்றங்கள் குக்கிராமங்களிலேகூட நடைபெறுகிற அளவுக்கு இலக்கியத்திலே மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று!

கோவலன் குற்றவாளியா என்ற கேள்வியை அடுத்து அதற்குப் பதிலளிக்கவேண்டிய சிலம்புச் செல்வர் எந்த ஒரு இடத்திலும் பாண்டியன் அவைக் களத்திற்குச் செல்லவே இல்லை.

**கோவலன் பிரிந்தது ஏன்?**

கண்ணகியின் சார்பில் நின்ரே—அல்லது பாண்டியனின் சார்பில் நின்ரே— கோவலனின் சாவுக்குக் காரணமான பொற்கொல்லனின் சார்பில் நின்ரே அவர் தன்னுடைய கருத்துக்களை எங்கும் எடுத்துச் சொல்லவில்லை.

கோவலன் குற்றவாளியா என்று அவர் ஆராய்ந்திருப்பது கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியின்பால் ஏன் சென்ருன்? என்கின்ற அந்த ஒரே விஷயத்தை வைத்துக்கொண்டு கோவலன் எவ்வளவு கலைநயம் படைத்தவன் — எந்த அளவுக்கு இலக்கிய நயம் உணர்ந்தவன் — எவ்வளவு மொழியறிவு கொண்டவன் —எவ்வளவு வீரம் செறிந்தவன் என்ற அனைத்தையும் தொகுத்துக் காட்டி, மாதவியின் பால் அவன் கொண்ட அன்பு காமத்தின்பாற் பட்டதல்ல; கண்ணகியிடம் பெற முடியாத இன்பத்தை பரத்தை ஒருத்தியிடம் பெறலாம் என்ற எண்ணத்தோடு கூடியதும் அல்ல!

பரத்தையர் வாழ்ந்த பகுதியிலே மாதவி வாழ்ந்த காரணத்தால் இவன் பரத்தன் என்று சொல்லப்பட்டால் இவன் பரத்தனைப்போல் நடந்துகொள்ளவில்லை. மதுரையிலே இவன் சிலம்பு விற்கச் சென்ற போதும் இளங்கோவடிகள் இவன் சென்று திரும்பிய இடங்களில் பரத்தையர் தெருக்களை குறிப்பிடுகின்ற காரணத்தால் இவன் கவுந்தியடிகளிடம் பொய் கூறிவிட்டு பரத்தையர் இல்லம் சென்று வந்தான் என்று சொல்லப் படுகின்ற— தாக்கப்படுகின்ற அந்தக் குற்றச்சாட்டு பொருந்துவதல்ல என்றெல்லாம் அவர் தனக்கேயுரிய மிடுக்கு நடையோடு இந்த ஏட்டிலே வாதாடி வெற்றி கண்டிருக்கிருர்.

இவ்வளவும் பல பக்கங்களிலே குறிப்பிட்டிருக்கிற விஷயம். இப்பொழுது ஒத்துக் கொள்வார் நான் இந்த நூலை முழுதும் படித்திருக்கிறேன் என்பதை;

இந்த உணர்வு கோவலன் குற்றவாளியா என்ற கேள்வி அவர் உள்ளத்திலே ஏன் எழுந்தது? என்று நான் எண்ணிப்பார்த்தேன். இது தான் எனக்கும் அவருக்கும் எப்படியோ ஏற்பட்டுவிட்ட பாசத் தொடர்பு எந்த அளவுக்கு வேலை செய்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று இளங்கோவடிகள் விழாவிலே பேசவேண்டும். நான் இதுவரை படிக்காத இது தொடர்பான புத்தகம் ஏதாவதுஇருந்தால்கொடுங்களென்று நண்பர் ஆனந்தம் அவர்களிடம் கேட்டுப் பெற்றேன். அப்படி நான் பெற்ற புத்தகத்தின் பெயர் சிலப்பதிகாரம், சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்' எனும் தலைப்பில் திரிகூட சுந்தரம் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய புத்தகம் அது.

அதைப் படித்து முடித்துவிட்டு சரியாக ஐந்தேமுக்கால் மணிக்கு இல்லம் வந்தேன். என் அந்தரங்கச் செயலாளர் ''கோவலன் குற்றவாளியா? என்கின்ற இந்தப் புத்தகத்தை என்னிடம் தந்தார்.

**விடை காத்திருந்தது!**

திரிகூட சுந்தரம் எழுதிய புத்தகத்தைப் படித்து விட்டு நண்பர் ஆனந்தம் அவர்களிடம் வருகிற வழியில் 'இப்படியும் ஒரு புத்தகமா? கோவலனையும்—தமிழக வரலாற்றையும்—சமுதாயத்தினையும் இழித்துக் கூறுகின்ற புத்தகமா? அதையும் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தினுடைய தமிழ் நூல் வெளியீடாக வெளியிட வேண்டுமா?'' என்றெல்லாம் கேட்டுக் கொண்டேவந்த எனக்கு வீட்டுக்குவந்ததும் விடை காத்திருந்தது என்ருல், எனக்குச் சோர்வுதருகின்ற நேரத்திலெல்லாம் — அறிந்து நீக்குகின்றஒருவர்இருக்கிருர் என்ருல், அவர் சிலம்புச் செல்வர் என்றுதான் கருதிக் கொள்ள வேண்டும்.


நான் இதைக் கற்பனையாகச் சொல்லவில்லை திரிகூட சுந்தரம் எழுதிய புத்தகத்தைப் படித்து சோர்வு ஏற்பட்ட போது அதை நீக்கியது சிலம்புச் செல்வருடைய இந்தப் புத்தகம்தான். அதுவரைக்கும் சிலம்புச்செல்வர் எழுதிய புத்தகம்—இன்று வெளியிடப் போகும் புத்தகம் என்ன புத்தகம்? இதில் எவற்றை ஆராய்ந்திருக்கிருர்? எப்படிப்பட்ட தவருன குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதிலளிக்க இருக்கிருர் என்பது இத்தப் புத்தகத்தைப் படிக்கும் வரைக்கும் எனக்குத் தெரியாது. இன்று மாலை ஐந்தேமுக்கால் மணிக்குப் பிறகு தான் இப்புத்தகம் என் கைக்குக் கிடைத்தது.

திரிகூட சுந்தரம் எழுதியுள்ள புத்தகத்தில் ''காவிரிபூம் பட்டினத்தில் வாழ்ந்த மக்கள் செல்வத்தில் திளைத்தார்கள் என்பது உண்மை தான். ஆனுல் அந்தச் செல்வத்தை எல்லாம் காமத்தில் ஆழ்வதற்கே பயன்படுத்தினுர்கள், அவர்கள் இழிந்த ஒழுக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதற்குச் சில சான்றுகள் உண்டு. இது திரிகூட சுந்

(11-ம் பக்கம் பார்க்க)

---

# 'குடவோலை' கூறும் சனநாயக மரபு



### நாவலர் நெடுஞ்செழியன்

தமிழறிவு வரலாற்றறிவு என்ற இரண்டு பகுதிகளோடு கல்வெட்டு அறிவு ஒன்ருகக் கலக்கும் போது இறந்தகால நிகழ்ச்சிகள் நன்கு தெளிவாக்கப் படுகின்றன. பழம்பெரும் மன்னர்களது வரலாற்றுச் சிறப்புக்களைக் குறிக்கும் பலவற்றை நாம் மேல்நாட்டாரைப்போல் போற்றிப் பாதுகாக்காமல் இருந்து விட்டோம். அதனுல் தான் நம் வரலாற்றை நாம் சரிவர அறியாமல் இருக்கிருேம். ஆனுல் மேல்நாட்டார் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சிகளுக்குக் கூட நினைவுச் சின்னம் எழுப்பிப் பாதுகாக்கிருர்கள்.

உலகத்தில் பல நாடுகளுக்குத் தொல்பொருள் ஆய்வுத்துறை ஒன்றே தேவையில்லை என்னும் அளவுக்கு மிகப் பழைய வரலாறுகள் இல்லாமல் பழம் பெருமையற்றிருக்கின்றன. ஆனுல் தமிழகம் மிகப் பெரும் பழைய வரலாற்றுக் களஞ்சியமாக விளங்குகிறது.

கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் இதுவரை கண்டறிந்தவரை 80 ஆயிரம் கல்வெட்டுக்கள் உள்ளன வென்று கணக்கிடப் பட்டுள்ளது. இவற்றுள் 25 ஆயிரம் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. சில ஆண்டுகளுக்குள் மேலும் பதினையாயிரம் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப்பட்டு— படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 40 ஆயிரமாகத் திகழ்கின்றன. இவற்றுள் ஆருயிரம் கல்வெட்டுக்கள்தான் ஆராய்ச்சிக்குத் தகுதியாக குறிப்புகளோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. 80 ஆயிரம் கல்வெட்டுகள் குறிப்புகளோடு வெளியிடப்பட்டு தமிழக வரலாறு எழுதப்படுமேயானுல் நம் நாட்டு வரலாறு எத்துணைச் செம்மையாக இருக்கும் என்பதை நாமே ஒருவாறு யூகித்து அறிந்து கொள்ளலாம்.

நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது அங்கேயுள்ள பாராளுமன்றத்தைக் காட்டினுர்கள். இங்கிலாந்துப் பாராளுமன்றம் உலகப் பாராளுமன்றத்தின் தாய் என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பாராளுமன்றத்தையொட்டி ஜனநாயகம் வளர்ந்த ஒவ்வொரு அரசர் அமர்ந்த இடத்தையும் செப்பேடுகளில் பொறித்து வைத்துக் காட்டினுர்கள்.

எப்போதோ ஓர் மன்னன் கல்லின் மீது அமர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ருனும். அந்தக் கல்லை சிம்மாசனத்திற்குக் கீழே பாதுகாப்பாக வைத்துப்போற்றுகிருர்கள். அந்தக் கல்கூட களவாடப் பட்டதாகவும் பிறகு தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து மறுபடி அதே இடத்தில் வைத்ததாகவும் கூறினர்.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் தாய் என்ருல் தமிழகத்தைத் தாய்க்குத் தாய் என்று சொல்லவேண்டும். அங்கே இங்கிலாந்து நாட்டில் மட்டுந்தான் பாராளுமன்றமுறை. ஆனுல் தமிழ் நாட்டில் ஊர்தோறும் ஜனநாயக முறையில் அமைந்த குடவோலைமுறை இருந்தது.

அன்றிருந்த ஊர்ச்சபைகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த உறுப்பினர்களுக்கு வேண்டிய தகுதிகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. உறுப்பினர் ஆவதற்குத் தகுதியில்லாதவர்கள் யார் யார் என்பதற்கும் வரையறை இருந்தது.

உத்திரமேரூர் சாசனத்தில் இதுபற்றிய குறிப்பு இருக்கின்றது. கையூட்டு வாங்குவோர் — சொந்தவீடு —நிலம் இல்லாதோர்—இவை போன்ற இன்னும் பல விதிகளும் வரையறுக்கப்பட்டு அவை இல்லாதோர் உறுப்பினராவதற்குத் தகுதி கிடையாது என்று விதிமுறை வகுத்துள்ளனர்; இது உத்திரமேரூர்ச் சாசனத்தில் இருக்கிறது. இலஞ்சம் என்பதற்கு அழகாக கையூட்டு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். பிறருக்குத்தெரியாமல் கைக்குக்கை ஊட்டிக் கொள்வதால் கையூட்டு என்ருர்கள்.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் இரவு

## கவிஞர் சுரதா

குறிஞ்சி—அங்கே, உறுதியான குன்றுகளும்; உயர்ந்தோங்கிய மலைகளும் உண்டு. அந்தக் கருங்கல கொப்புளத்தில் வேங்கை மரம் போன்றவனின் வீடுமில்லை, அம்மரத்தின் மீது படரும் மிளகுக்கொடி போன்றவளின் வீடுமில்லை.

முல்லை—அங்கே, விதைகளின் வயிற்றிலே பிறந்த மரங்களும்; விலங்குகளின் வீடுகளாகிய காடுகளும் உண்டு. அந்தக் கோவலர் கோட்டத்தில், காட்டாறு போன்றவனின் வீடுமில்லை குளிர் தூங்கும் குறுஞ்சுனை போன்றவளின் வீடுமில்லை.

பாலை—அங்கே, கண்களை ஏமாற்ற வல்ல கானல்நீரும்; காய்ச்சலோடு படுத்துக்கொண்டிருக்கும் பாதைகளும் உண்டு. அந்த நெருப்பு நிலத்தில்; பாலையாழ்போன்றவனின் வீடுமில்லை, அந்த யாழிலே பிறக்கும் பஞ்சுரப்பண் போன்றவனின் வீடுமில்லை.

நெய்தல் — அங்கே, கதிரவன் முகம்பார்க்கும் கண்ணாடிக் கடலும் காலின் கீழ் மிதிபடும் நிலா நிறமணலும் உண்டு: அந்த ஈரத்தின் எல்லையில்; அன்றில் போன்றவனின் வீடுமில்லை. அழகுமிகு அன்னப் பறவை போன்றவளின் வீடுமில்லை.

மருதம்-அங்கே ஏர் பரந்த வயலும்; நீர்பரந்த கழனியும்; நெல்மலிந்த மனைகளும்; சொல்மலிந்த மன்றங்களும் உண்டு அந்த வண்டல் மண்டலத்தில் தான் அவன் வீடும் இருந்தது. அவள் வீடும் இருந்தது.

அவள்—

ஏழு நாட்களில் இரண்டு நாட்களைப் போன்றவள். அதாவது, திங்களும் செவ்வாயும் போன்றவள். நான்குவகைப் பூக்களில் இரண்டு வகைப் பூக்களைப் போன்றவள், அதாவது, கோட்டுப் பூவும் கொடிப் பூவும் போன்றவள்.

அவள்நெற்பயிர்! அவள் பெயர் வண்டமர் குழலி, அவன் பிறந்த ஊர் இராதா நல்லூர். அருணைக் கலம்பகம் பாடிய எல்லப்ப நாவலர் பிறந்த ஊரும் அதுதான்:

அவரும் அந்த அழகியும் ஒரே ஊரில் பிறந்தவர்கள் என்றாலும்; இருவரும் ஒரே நேரத்திலோ ஒரே நூற்றாண்டிலோ பிறக்கவில்லை.

அவரோ, 17-ஆம் நூற்றாண்டிலே பிறந்தவர்.

அவளோ, 19-ஆம் நூற்றாண்டிலே பிறந்தவள்.

இருவரின் பிறப்புக்கும் இடையே உள்ள கால நீளம், சரியாக இரண்டு நூற்றாண்டுகள், அதாவது 2400 நிலாத்தலை இரவுகள்!

அந்த நேரிசை நாவலர், சுடாத இரவிலே பிறந்தாராம். அந்த மருத நிலத்து மங்கையோ, சுட்டுப் பொசுக்கும் பகல் நேரத்திலே பிறந்தாளாம்.

யாமத்திலே பிறக்காமல், பெற்றோரின் காமத்திலே பிறந்த அக்கட்டழகி, பிறக்கையில் அழுதுகொண்டே பிறந்தாளாம்!

தாய் ஊட்டிய பால் அவள் உடலை வளர்த்திட; தந்தை ஊட்டிய தமிழ், அவள் அறிவை வளர்த்திட, அவள் வளர்ந்தாள்; வளர்ந்து கொண்டே இருந்தாள். புல்லும் பொறாமையும் விரைந்து வளர்வதுபோல் வளர்ந்து கொண்டே இருந்தாள்.

அவள், தன் அங்கத்தை தங்கமாக்கிக் கொண்டு தோல் மேடுகளைச் செவ்விள நீராக்கிக் கொண்டு, கொக்கோகக் குமரியானாள்.

தொட்டில் பருவத்தில் உதடுகளால் உரையாடி வந்தவள், கட்டில் பருவம் வந்த பின் கண்களால் பேசத்தொடங்கினாள்.

எதிர்வீட்டு ஏகாம்பரம், அவள் விழிக்குளத்தில் விழுந்து நீந்தினான். அவள் அவனைத்தன் இருகரங்களாலும் ஏந்தினாள்.

கண்களில் விளைந்த உறவு பத்தாவது நாள் காதல் இரவாக மாறிவிட்டது.

ஒட்டும்போது உறவும், ஒதுங்கும் போது பிரிவும் காத்திருக்கும்போது கனவுகளும் ஏற்படும் என்பதை அந்தச் சந்தனச் சந்திப்புக்குப் பிறகு அவள் அறிந்துகொண்டாள்.

ஒரு நாள்—

நிலா வட்டம் முதலில் வர, அதற்குப் பிறகு அந்த அழகி வரவேண்டிய இடத்திற்கு வந்தாள்.

அவனும் அங்கே வந்து சேர்ந்தான். கரும்பின் பக்கத்திலே கதிர்ச் செந்நெல்! கலைமானின் பக்கத்திலே கவரிமான்!

வல்லினத்தின் பக்கத்திலே மெல்லினம், வளையலின் பக்கத்திலே வைர மோதிரம்! கவிதையின் பக்கத்திலே கட்டுரை — இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி அவர்கள் நெருங்கி நின்றுகொண்டிருந்தனர்.

அவன் அவளை நோக்கி—
"இரண்டு நாட்களாக நம் ஊரில் நல்ல மழை''! என்று கூறினான்.

ஆமாம்! அந்த மழையில் நேற்று நான் நனைந்து போய் விட்டேன்'' என்றாள் அவள்.

"தங்கமே! நீ அப்படி மழையில் நனையலாமா?'' என்று கேட்டான் அவன்.

''தங்கம், தண்ணீரில் நனையலாம். இரும்புதான் நனையக்கூடாது ஏனென்றால் ஈரம்பட்டால் இரும்பு துருப்பிடித்துப் போய் விடாதா?'' என்றாள் அவள்.

அவன் அவளை நோக்கி—
நீங்காத நீரும், தூங்காத அலைகளும் நீயல்லவா என்றான்.

அவள் அதைக் கேட்டு, நான்கில் ஒன்றாகிய நாணத்தைக் காட்டினாள்.

''நீ அமிழ்தம்'' என்றான்.

"அமிழ்து அமிழ்து அமிழ்து என்று ஐந்தாறு முறை விரைவாக உச்சரித்தால், அதில் தமிழ் தமிழ் என்னும் ஓசை உண்டாகும்'' என்று சொன்னாள் அவள்.

''நீ சங்க காலத்து ஔவை'' என்றான்.

"இருக்கலாம், ஆனால் நான் அவளைப் போல் கள் குடிப்பதில்லையே?'' என்றான் அவள்.

"நீ, எனக்கு வாய்த்த இரண்டாவது ஔவை'' என்று மீண்டும் கூறினான்.

"தேசத்தைப் பற்றிப் பாடுவேனே அன்றி; அவளைப்போல் நான் தெய்வத்தைப் பற்றிப் பாடமாட்டேனே'' என்றாள் அவள்.

''பொன், அழகின் அடையாளம்'' என்று அவன் சொன்னான்.

"புகழ், அறிவின் அலங்காரம்'' என்று அவள் சொன்னாள்.

"பூசும் சந்தனமும் பூணும் பொருள்களும், நம்மைப்போல் ஆசை கொண்ட காதலர்களுக்கு அவசியம்'' என்று கூறிக்கொண்டே ஓர் அழகான மலரை அவளிடம் கொடுத்தபடி,

பாரசீக மக்களுக்கு
மாதுளம்பூவும்,
பிரஞ்சுக்காரர்களுக்கு
ரோஜாப்பூவும்,
ஆங்கிலேயருக்குச்
செறிமலரும்
கிரேக்க மக்களுக்கு
ஒலிவமலரும்,
உரோமனியருக்கு
முந்திரிமலரும்
ஜப்பானியருக்கு
ரோஜாவும்
எகிப்தியருக்குக்
குமுதமும்

உனக்கு இம்மலரும் பிடிக்கும்! எனக் கூறி, ஆலின் விழுதுபோல் நீண்ட அவள் கூந்தலில் அதனை வைத்தான்.

அவள் அவனைச் சுட்டிப் புகழ்ந்தாள்.

அவன் அவளைத்தொட்டு மகிழ்ந்தான்.

கையைச் சேர்த்தனர்: பிறகு, பொய்யை சேர்க்கும் கற்பனைகளுக்கு ஓய்வளித்து மெய்யைச்சேர்த்தனர்.

---

# உமா உத்தமியா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைகளைத் தாண்டி— இன்னல்களைத் தாங்கி துன்பத்திலும் இன்பம் காணும் உண்மையான அன்பு பூண்ட தூய காதலுக்கு முன் எத்தகைய மாறுபட்ட உணர்ச்சிகளோ, ஆசைகளோ எழுந்திட முடியாது. அத்தகைய வலிமை உண்மையான, புனிதமான காதலுக்கு மட்டுமே உண்டு.

இத்தகைய உண்மையான அன்பு இருப்பதற்கு தன்னை அருகதை அற்றவளாக ஆக்கிக்கொண்டு, அற்ப பணத்துக்காக அடிமையானாள். கணேசனை மணப்பதற்கு சம்மதமளித்தாள்.

உமா சம்மதித்துவிட்டாள் என்பதை அறிந்த சேகரது உள்ளம் எரிமலைபோல் குமுறியது. விரக்தியின் விளிம்புக்கே அவன் தள்ளப்பட்டான். உமா தன்மீது காட்டிய அன்பு உண்மையான அன்புதானா? அவள் தன்னுடன் உறவாடியதெல்லாம் வெறும் கனவா? என்றெல்லாம் எண்ணி வேதனையால் வாடினான்.

எந்த அன்புக்கு மதிப்புக் கொடுத்து, தன்னை நாடி வந்த பொன்னையும் பொருளையும் தூசாக மதித்து உமாவையே தன் வாழ்க்கைத் துணைவியாக அடைய வேண்டுமென சேகர் ஆசைப்பட்டானோ அந்த ஆசையை அவள் நிராசையாக்கி விட்டாள்:

தனக்கேற்பட்ட ஏமாற்றத்தினால் சேகர் அமைதியை இழந்து அலைந்து திரிந்தான். அவனை உமா வஞ்சித்து விட்டாள் என்பதை புரிந்துகொண்ட உமாவின் தோழியாகிய மஞ்சுளா உமாவைச் சந்தித்து சேகரின் மனக்குறையை எடுத்துரைத்து அவனை வெறுப்பதன் காரணத்தை வினவினாள்.

மஞ்சுளாவுக்குப் பதிலளித்த உமா தான் சேகரைக் காதலிக்கவில்லை என்றும்; அவன்தான் தன்பின்னால் அலைந்து திரிந்தான் என்றும் பொய் வார்த்தைகளால் உண்மையை மூடிமறைத்து தான் ஒரு தவறும்செய்யாத உத்தமி என நிரூபிக்க முனைந்தாள்! கேவலமான வார்த்தைகளால் சேகரை நிந்தித்தாள். உண்மை எது என்பதை ஆதாரங்களுடன் அறிந்திருந்த மஞ்சுளா தனது தோழியின் பொய் வார்த்தைகளை நம்ப மறுத்ததுடன் உமாவின் நட்பையே வெறுத்தாள். காதலை வாழவைக்க மஞ்சுளாவால் முடியவில்லை.

அற்ப பணத்துக்காகத் தன் காதலைத் திசை திருப்பிய உமா, 'நீர்க்குமிழி போன்ற நிலையற்ற வாழ்க்கையைப் பெரிதென்றெண்ணிப் பெண்கள் தம் கண்ணெனப் போற்றும் மாசற்ற பெண்மையை, ஒருத்தி ஒருவனுடன் வாழ வேண்டும் என்ற இல்லற ஒழுக்கத்தை, தமிழ்க் குலப் பெண்களின் பண்புமிகு கற்புநெறியை பணத்துக்கு அடிமையாக்கினாள். தான் சேகர் மீது செலுத்திய காதலைச் செல்லாக் காசாக்கினாள்.

உமாவின் மனமாற்றத்தினால் ஏமாற்றமடைந்த சேகர் அவளுக்கு இறுதியாக ஓர் கடிதம் வரைந்தான்—

உமா, உனக்கு விரைவில் திருமணம் நடக்கப் போகிறது என்பதை அறிந்தேன். உண்மைதானே? உமா, உனக்கு நான் எந்த வகையிலும் துரோகம் நினைத்தவனல்ல, அப்படியிருந்தும் [illegible] என்னை வஞ்சித்துவி[illegible] அன்று நாம் காதல் பறவைகளாக பழகிக்களித்த பசுமையான நினைவுகளையெல்லாம் எப்படித்தான் மறந்து வேறொருவனுக்கு மாலையிட உனது மனச்சாட்சி இடமளிக்கிறது என்பதை நினைக்கும்போது நானடையும் வேதனையை நீ உணர மாட்டாய்.

'உங்களுக்காகவே நானும் எனக்காகவே நீங்களும் பிறந்திருக்கிறோம் இதை யாராலும் பிரிக்கமுடியாது, எது எப்படி இருந்தாலும் நாம் ஒன்றுபடுவோம் என்பது உறுதி' என்று நீ கடிதத்தில் எழுதிய வாக்குறுதிகள் காற்றிலே போயிற்றா?

உமா, நீ என்னை ஏமாற்றிய துரோக நிகழ்ச்சியை மறந்து புதிய காதலனுடன் இன்பமாக வாழலாம். ஆனால் காலப் போக்கில் உனது உணர்வுகள் அந்தத் துரோகப் பாசறைக்கு உந்தப்பட்டு நீ ஈட்டிய நெறியற்றசெயலை உணர்ந்து வருந்துவாய் என்பதை இப்போது நீ புரிந்துகொள்ளமாட்டாய். உமா, மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நெறிமுறை ஒன்றுண்டு; எப்படியும் வாழலாம் என்ற வெறிமுறையும் மனிதர் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது. இதில் நீ எந்த ரகத்தைச் சார்ந்தவள் என்பதை நான் எழுதவேண்டியதில்லை: அது உனது மனச்சாட்சிக்குப் புரியும்! உனது புதிய காதலுக்கு எனது இதய வாழ்த்துக்கள்!

இப்படிக்கு,

சேகர்.

கடிதத்தை உமாவின் [illegible] தத்தைப் பெற்றுக்கொண்ட

---

# குடவோலை..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக குடவோலை முறை என்பது தமிழ் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வந்தது. இது இராஜ ராஜ சோழன் காலத்தில் வந்ததென்று சிலர் சொல்வர். இது தவறு. சங்க காலத்திலேயே குடவோலை முறை இருந்தது என்பதற்குச் சான்றிருக்கிறது.

போர்க்களத்தில் மாண்ட வீரனுடைய வயிறு பானைபோல் ஊதி விட்டது: அதைக் கழுகு தன் மூக்கால் கொத்தி உள்ளேயிருக்கிற குடலை எடுத்துப் போட்டதாம். அது எப்படியிருக்கிறதென்றால் குடத்திலுள்ள ஓலையை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே போடுவது போன்றிருந்ததாம்: இப்படிப்பட்ட உவமைதரும் இலக்கியத்திலிருந்துதான் நாம் நமது வரலாற்றை ஓரளவு உணரமுடிகிறது. ஆகசங்காலத்திற்கு முன்பே குடவோலை முறை இருந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன.

திருவரங்க நாதர் கோயிலுக்கு அண்மையில் நான் சென்றிருந்தபோது விஜய நகர மன்னர்கள் மராட்டிய மன்னர்கள் வரலாறு அங்குள்ள கோயில் சுவர்களில் பொறிக்கப் பட்டிருந்தது கண்டேன். கோயில் சுவர்கள் எல்லாம் பழங்காலத்தில் வரலாற்றுக் களஞ்சியங்களாக விளங்கியிருக்கின்றன.

தஞ்சாவூர்ப் பிரகதீசுவரர் கோயிலுக்கு மட்டும் ஆண்டொன்று 41 ஆயிரம் கலம் நெல் வந்ததாம். அந்த அளவுக்கு கோயில் மானியங்கள் இருந்தன: இன்று அந்த மானியங்களையும் காணோம், நெல்லையும் காணோம்.

தொல்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சிமூலம் தமிழக வரலாற்றை தெள்ளத் தெளிவாக விளக்க இத்துறை முயற்சியை மென்மேலும் மேற்கொள்ள வேண்டும்.

---

உமா அதைப் படித்துவிட்டு மௌனமாக இருந்துகொண்டாள்.

இந்நிலையில் உமாவுக்கும் கணேசனுக்கும் அவசர அவசரமாகத் திருமணம் சுருக்கமாக நடைபெற்று முடிந்தது.

★ ★ ★

சுபம்—மங்களம் என்று இந்தக் கதையை நான் முடிக்க விரும்பவில்லை. சுபமும் மங்களமும் உமாவுக்குத்தானே! பாவம்... அந்த வஞ்சகியால் ஏமாற்றப்பட்டு இங்கே காலமெல்லாம் அழுது வாழும் சேகருக்கு சேகரைப் பற்றி அனுதாபப்படவாவது இந்த உலகில் ஒரு ஜீவன் உண்டா? எல்லோரும் உமா உத்தமி என்கிறார்கள் — மண்ணாங்கட்டி.

(யாவும் கற்பனை)

---

# பம்பைமடுவில் புதிய உபதபால் நிலையம்

பம்பைமடு கி. மு. சங்கம், மற்றும் பொது ஸ்தாபனங்களும் பல வருடங்களாக எடுத்துக்கொண்ட முயற்சிக்கு வவுனியா பா. உ. மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக பம்பை மடுவில் ஒரு புதிய உபதபால் நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மூர்த்திகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் காங்கிரஸ் சார்பிலே அடிப்படைத் தீர்மானங்களுக்கு தாம் தனியான திருத்தங்களைக் கொண்டுவரப்போவதாக அறிவித்தார்! அத்திருத்தங்கள் அரசியல் நிர்ணய சபையின் ஒழுங்குப்பத்திரத்திலும் இடம் பெற்றிருந்தன. தியாகராசா கொண்டு வரப்போவதாக கூறியிருந்த திருத்தங்கள் அனைத்தும் இந்நாட்டுத் தமிழினத்துக்கு ஏற்புடையன என்பதை யாருமே மறுத்திட முடியாது. அத்திருத்தங்களில் சிலவற்றைத்தான் கொஞ்சம் பாரேன்!

- சாதியைக் காரணமாகக் கொண்டு எப்பிரஜையும் கோவில், தேவாலயம், அல்லது அத்தகைய தொரு வணக்கத்துக்குரிய புனிதஸ்தலம், உணவுச்சாலை, விடுதியகம், கடை, பொதுக்களியாட்ட நிலையம், மற்றும் பொது இடங்கள், ஆகியவற்றில் பிரவேசிப்பதற்கு மறுக்கப்படலாகாது; அத்துடன், அங்குவழங்கப்படும் வசதிகள், இன்பவாய்ப்புக்கள், சேவைகள் ஆகியவற்றிலும்; பாகுபாடு எதுவும் காட்டப்படுதல் கூடாது;

- சகலதரங்களிலும் தமது தாய் மொழியில் கல்வி புகட்டுவதற்கான உரிமையும் அரசாங்க சேவைக்கு அனுமதிப்பதற்கான பரீட்சை எதிலும் தனது தாய்மொழியில் பரீட்சிக்கப்படுவதற்கான உரிமையும் ஒவ்வொரு பிரஜைக்கும் இருந்திடவேண்டும்.

- சகல தரங்களிலும், போதனுமொழி தாய் மொழியாக இருந்திட வேண்டும்;

- குடியரசின் அதிகார சபைகளுடனும் அரசாங்க கூட்டுதாபனங்கள், நிறுவனங்களுடனும் தனது சொந்த மொழியில் தொடர்புகொள்ளும் உரிமை ஒரு பிரஜைக்கு இருக்கவேண்டும்: அத்துடன் ஒரு பிரஜைக்கு அனுப்பப்படும் நிர்வாக உத்தியோகபூர்வமான சாதனங்கள் அப்பிரஜையின் மொழியிலுமிருத்தல் வேண்டும்.

- சகல சட்டங்களும் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் இயற்றப்படல் வேண்டும்.

- குடியரசின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆகும்: அதன் அரச கரும மொழிகளும் அவைகளாகவே இருக்க வேண்டும்.

- சிங்களத்தில் சிறீலங்கா என்றுள்ள இடங்களிலெல்லாம் தமிழில் "இலங்கை" என்று இடப்படல் வேண்டும்;

- நீதிமன்றப் பதிவுகள், நடவடிக்கைகள், யாவும் கட்சிக்காரர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாக இருந்தால் சிங்களத்திலும் தமிழ் மொழி பேசுபவர்களாக இருந்தால் தமிழிலும் இருத்தல் வேண்டும்.

- சட்டங்களை ஒழுங்குபடுத்துவதையும் சட்டவாக்கங்களை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிடுவதையும் பொறுப்பாகக் கொண்ட ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

—இவை நண்பா, தியாகராசாவின் பெயரில் அரசியல்நிர்ணயசபையின் ஒழுங்குப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்த ஏராளமான திருத்தப் பிரேரணைகளில் சில. உண்மையில் தமிழ் மக்களின் உள்ளத்துடிப்பினை எடுத்துக்காட்டிடும் திருத்தங்கள்!

கொல்வின் ஆர். டீ, சில்வாவினுல் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளத்தக்கன; அதில் கூறப்பட்டுள்ளவைகளைவிட தமிழர்களுக்கு அதிக நன்மை வேறு கிடைக்கமுடியாது; என்று முதலில் கூறிய தியாகராசாவுக்கு, தமது கூற்றில் நம்பிக்கையிருந்திருக்குமாஞல் மேற்கண்ட திருத்தப் பிரேரணைகளை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்க வேண்டியதில்லையே!

எனவே கொல்வினின் அடிப்படைத் தீர்மானங்கள் தமிழருக்கு கொள்ளிவைக்க கூடியன என்பதை உணர்ந்துதான் பின்னர் திருத்தங்கள் கொண்டுவரப் போவதாக அறிவித்தார் என்பதை தியாகராசாவே மறுத்திடமுடியாது.

ஆனுல், நண்பா, தியாகராசாவுக்கு வந்த 'திடீர் ஞானம்' திடீரென மறைந்து விட்டது ஆளுங்கட்சியுடன் சங்கமமாகியதுடன்! ஆம், எந்தத்திருத்தங்கள் தமிழினத்துக்கு முக்கியமானதெனக்கருதி கொண்டுவரவிருந்தாரோ அதே திருத்தங்களை கொண்டுவரப்போவதில்லையென்றும், கொல்வினின் அடிப்படைத்தீர்மானங்களை அப்படியே ஏற்றுக் கொள்வதாகவும் இப்போது அறிவித்துவிட்டரர் தியாகராசா!

தாம் திருத்தங்களைக் கொண்டுவராமல் விடுவதற்கு தியாகராசா கூறிய காரணங்கள் என்ன தெரியுமா?

1. தமிழ் காங்கிரஸ் பாராளுமன்றக்குழு ஆளுங்கட்சியுடன் இப்போது சங்கமமாகிவிட்டதாம்!

2. நாடு இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்துக்கு தாம் தொல்லை கொடுக்க விரும்பவில்லையாம்!

3. விரைவில் புதிய அரசியல் சட்டம் தயாராக்கப்படவேண்டும் என்ற ஆசையாம்!

கவனித்தனையா நண்பா, ஆளுங்கட்சியின் அடிவருடி 'எலும்புத்துண்டு, ஏதாவது பெறுவதற்காக தமிழினத்துக்கு சார்பான திருத்தங்களையே காற்றில் பறக்கவிட்டு—தமிழினத்தின் கோரிக்கைகளை காவு கொடுத்து—மாற்றாரை மகிழவைக்கும் இனத்துரோகிகளை!

ஆம், தமிழ்காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்டு இப்போது அம்மாவின் கால்கழுவி வாழும் மும்மூர்த்திகளுக்கும் தமிழினம் எக்கேடு கெட்டுப்போனுலும் அதுபற்றி கவலையில்லை! மாற்ருரின் வால் பிடித்து — தாள்பிடித்து வயிறு கழுவி, தமிழ் மானத்தை விற்கும் பச்சைத் துரோகிகள் இவர்கள் அன்ருே!

தமிழரசுக்காரர்கள், தமிழை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் ஒதுக்கிவிடப் பார்க்கிருர்கள்; நானே வடக்கே பருத்தித் துறையிலிருந்து தெற்கே தேவந்துறைவரை தமிழுக்கு சமஅந்தஸ்து கோருகிறேன்'—என்று தேர்தலுக்கு தேர்தல் மேடைகளில் கூவிவந்த பொன்னம்பலத்தின் மூன்று சீடர்களும் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில்கூட தமிழையும் தமிழினத்தையும் ஒழித்துக்கட்டி இலங்கையை சர்வ சிங்கள பௌத்த நாடாக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு அன்ருே அளித்து வருகின்றனர்!

இத்தகைய துரோகிகள் நம்மினத்தில் இருக்கு மட்டும் நம்மவருக்கு எங்கே நண்பா விடுதலை?

உன்நண்பன்.

கோவை-மகேசன்

## தமிழரின் வரலாற்றுக் கருவூல...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தரம் எழுதி அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள் எனுந் தலைப்பில் ஆற்றிய உரையிலே ஒரு பகுதியாகும்.

### சிலப்பதிகாரத்தை இழிவுபடுத்தலாமா!

அது மாத்திரமல்ல, மாதவிக்கு அவளுடைய அரங்கேற்றம் முடிந்தபிறகு தலைக்கோல் போன்ற பல பரிசுகளெல்லாம் அளிக்கப்பட்டு இறுதியாக ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் அளிக்கப்படுகின்ற நேரத்தில் இளங்கோவடிகளுடைய வரிகளை எடுத்துச் சொல்லி இதைவிட இழிவான ஒன்று, தமிழகத்தில் இருக்க முடியாது என்றுஅவர் ஆற்றிய உரையும் இந்தப் புத்தகத்திலே அச்சிடப்பட்டிருக்கிறது.

''விதிமுறை கொள்கையின் ஆயிரத்தெண் கழஞ்சு ஒரு முறையாகப் பெற்றனள்''—இது இளங்கோவடிகள் எழுதியது. இதற்கு திரிகூட சுந்தரம் தருகின்ற விளக்கம்—அதாவது, நாடகக் கணிகையர் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்னை ஒரு நாளைக்குப் பரிசாகப் பெறுதல் நூல் வழக்கு. இதனினும் இழிவான செயல் வேறுண்டோ? அரசன் கலைகளை வளர்க்கும் முறை இதுதானு?

மாதவியினுடைய ஆடலும் பாடலும் இத்துனைப்பொருள் பெறத்தக்கது என்று கூருமல் அவளுடைய அழகான உடல் இத்துணைப் பொன் விலை பெறத்தக்கது என்று கூறுவது அரசியல் தர்மமா?' என்று கேட்கிருர்—

நான் படித்த தமிழில் இவ்வளவு பதவுரை — பொழிப்புரை இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. 'விதிமுறை கொள்கையின் ஆயிரத் தென்கழஞ்சு ஒரு முறையாகப் பெற்றனள்—நடனமாடுவோருக்கு ஆயிரத்தெட்டு கழஞ்சுப் பொன் தருவது விதிமுறையாக இருக்கலாம்; அதை ஒரு முறையாகப் பெற்ருள் என்று இருக்கலாம்: ஆனுல் அதை அவள் உடலுக்காக அரசன் கொடுத்தான் என்று சோழ மன்னனையும் இழிவுபடுத்தி அவர்கள் இருவரையும் இழிவுபடுத்தியதாக இளங்கோ வடிகளையும் இழிவுபடுத்தி திரிகூட சுந்தரம் சொல்லியிருக்கிருர்.

அவர் தனது கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது: ஆனுல் இந்தக் கருத்துக்களெல்லாம் இளங்கோவடிகளை—கண்ணகியை — கோவலனை—மாதவியை—மொத்தமாகச் சிலப்பதிகாரத்தைப் பொன்னேபோல் போற்றி இதுவன்ருே தமிழர்களுக்கு மிச்சமாக இருக்கின்ற ஒரேயொரு வரலாறு — இதுவன்ருே சேர நாட்டை—சோழநாட்டைப்—பாண்டிய நாட்டை மூவேந்தருடைய நாட்டையும் படம் பிடித்துக் காட்டுகின்ற ஒரேயொரு ஓவியம் என்று பாதுகாத்து வைத்திருக்கின்ற இந்த கருவூலகத்தையும் இழிவுபடுத்தி விட்டால் பிறகு தமிழ் மொழியில் வரலாற்றை அறிந்திட என்னதான் இருக்கிறது என்பதை தயவு செய்து எண்ணிப்பார்த்திட வேண்டும்.

அந்த மனக் கவலையை அகற்றுகின்ற நூல்தான் இந்தச் சிறியநூல். ஒரு வேளை சிலம்புச் செல்வர் அவர்கள் சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகளைக் கேட்டுவிட்டோ அல்லது படித்துப் பார்த்து விட்டோ இந்த நூலை எழுதியிருக்கலாம்.

ஏனென்ருல் சில இடங்களில் அப்படி ஜாடையாக இதுபோல் கருத்துக்கள் சொல்பவர்களை அவர் மறைமுகமாகத் தாக்கியிருக்கும் வரிகளையும் இந்தப் புத்தகத்தில் பார்த்தேன்;

## மேயர்களை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் கஷ்டங்களை ஏற்படுத்தும்: ஏதாவது ஒரு எல்லையை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதினுல் அந்த எல்லையை எவ்வளவு தூரத்திற்கு உயர்த்திவைக்கமுடியுமோ அவ்வளவு தூரத்திற்கு உயர்த்திவைக்க வேண்டுமென்று அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இன்னுமொரு விடயத்தைப்பற்றி இங்கே குறிப்பிடவேண்டியிருக்கின்றது: இப்பொழுது ஒரு மாநகர சபையின் மேயரை அவருடைய பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ருல் சாதாரண அதிகப்படியான வாக்கொன்றினுல் நீக்கிவிடலாம். அதைத் திருத்தி மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளினுல்தான் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாமென்று திருத்தம் செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்ருகும். இது வரவேற்கத்தக்க ஒரு சரத்து என்பதை நான் இங்கே கூறிவைக்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாண மாநகர சபையிலே நடைபெறுகின்ற விஷயம் உங்களுக்குத் தெரியும்: அடிக்கடி மேயர்களை ஏற்றுவதிலும் இறக்குவதிலுமே யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். அதற்கு ஒரு

''கோவலன் குற்றவாளியா?'' என்று கேட்டு அவனுடைய வாழ்க்கையில் — அவனுடைய பண்பில் — கலையுணர்வில்—கட்டிக் காத்த நாகரீகத்தில் — அவன் கற்ற மொழியில்-அவன் உணர்ந்த இலக்கியத்தில் எவ்வளவு சிறப்புக்கள் உண்டோ அவ்வளவு சிறப்புக்களையும் அள்ளித் தெளிக்கின்ற இந்த [illegible] னர்.

## உடல்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நவீன வங்கமொழித் தந்தையாக தாகூர் இருப்பதால் வங்காளிகள் மத உணர்ச்சியைத் தாண்டி அவரைத் தங்கள் உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாகக் கருதுகிருர்கள்!

உருது மொழிக்கெதிராக அவர்கள் நடத்திய தீரமிக்க போராட்டங்களின் போதெல்லாம் கூட்டம் கூட்டமாக ஆண்களும், பெண்களும், மாணவர்களும் பெரியவர்களும் ரவீந்திரநாத் தாகூரின் எழுச்சி தரும் பாடல்களை முழங்கியவாறேதான் அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்!

ஆம் வங்காளிகளின் புரட்சிக் கவிஞர் அல்லவா தாகூர்!

துப்பாக்கிக் குண்டுகளுக்கு அவர்கள் மார்பு காட்டும் போதெல்லாம் அவர்கள் உதடுகள் இசைத்தது 'திணிக்குள்ள வேற்று மொழியை நாம் எதிர்ப்போம்! உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை'—என்பது போன்ற தாகூரின் பாடல்களைத்தான்!

முட்டுக்கட்டை போட வேண்டியது அவசியம். அப்படி முட்டுக்கட்டை போடாவிட்டால் அந்த நகரத்தின் முன்னேற்றத்துக்கு மிகவும் இடைஞ்சல் ஏற்படும். இன்று பதவியிலிருக்கும் மேயருக்கு இந்தச் சட்டம் ஒருவாய்ப்பை அளித்தாலும் நாங்கள் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேம் என்று கூறுகிறேம். அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று நாங்கள் கருதினுலும் இது மாநகர சபை நிர்வாகத்துக்கு நன்மை விளைக்கும் என்ற காரணத்தால் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேம்.

(தாகூரின் பிறந்த இடம் இப்போது கிழக்கு வங்கத்தில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.)

கிழக்கு பாகிஸ்தான் வாழ்வோர் அவரை அன்புடன் 'கவிகுரு' என்றே அழைக்கிருர்கள்.

முஜிபுர் ரகுமானும் அவரை மரியாதையுடன் 'கவிகுரு' என்ருே குறிப்பிடுகிருர்.

அவர் முன்பொரு முறை லண்டன் சென்றிருந்தபோது 'உங்கள் வருங்காலத் திட்டம் என்ன?'—என்று கேட்டபோது மொழியுணர்வை விளக்கும் தனது 'கவிகுரு' வின் பாட்டைத்தான் பாடிக் காட்டினுராம்!

வங்க மொழி வங்காளிகளின் ஊனோடும் உயிரோடும் பேச்சோடும் மூச்சோடும் கலந்துவிட்ட மொழி.

அண்மையில் 'மெயின் ஸ்ட்ரீம்' என்னும் ஆங்கில வார ஏடு நிமாத் உசேன் என்னும் கிழக்குவங்கத்தைச் சேர்ந்தவர் வங்க மொழியில் எழுதிய கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தது!

(அக்கவிதை இக்கட்டுரையில் தனியாக இடம் பெற்றுள்ளது.)

வங்காளிகளின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதற்கு இந்தக் கவிதை வரிகளே போதுமானவை!

''கொத்துக்கறி போல என் சதையைத் துண்டு துண்டாகக் கொத்திக் கூறு போட்டாலும் — என் சதையின்—இரத்தத்தின் ஒவ்வொரு அணுவும் — 'வங்கம் வங்கம்' என்றே முழங்கும்,''


— என்கிருன், வங்காளி

இயந்திரத் துப்பாக்கிகள் உயிரை மாய்க்கலாம்! இந்த உணர்ச்சியை மாய்க்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


71வது நாள் செல்லமகால்
வின்சர் (யாழ்நகர்) — இம்பீரியல் (மட்டுநகர்)



மாஸ்டர் பிரபாகர் திறம்பட நடித்த
வாரராஜாவா

எல்பின்ஸ்டன்
(மருதானை)
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
—நடித்த—
குடும்பத் தலைவன்

றொக்ஸி
(வெள்ளவத்தை)
ரஞ்சன்
டி. ஆர். ராஜகுமாரி
—நடித்த—
சந்திர லேகா

கெயிட்டி
(கொட்டாஞ்சேனை)
ஜெமினி, தேவிகா
—நடித்த—
வாழ்க்கைப் படகு

விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரையில்
அவரே என் தெய்வம்

4வது ஜனத்திரள் நிறைந்த மாதமாக காட்சிதருகின்றன்

சென்ட்ரல் (மருதானை)
ராணி (யாழ்நகர்)
—ஆகிய திரைகளில்—
நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்
சிவாஜிகணேசன் அளிக்கும்
அருண்பிரசாத் மூவிஸ்



சதன்
நம்பியார்
எஸ். என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த

ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)
இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்
(பாஸ்கள் யாவும் ரத்து)

விரைவில் எதிர்பாருங்கள்



கெப்பிட்டல் பிளாஸா
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
அசோகன் முத்துராமன்
நாகேஷ் ஷீலா
நடித்த
ராமண்ணாவின்
டைரக்ஷன்:—ராமண்ணா

மூன்றெழுத்து

கெப்பிட்டல் பிளாஸா:
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
ரத்னா—நம்பியார்
—நடித்த—
எங்க வீட்டுபிள்ளை
புதிய கொப்பி (கலர்)

கிங்ஸ்லி
சிவாஜி சரோஜாதேவி
ரங்கராவ்
—நடித்த
பாலும் பழமும்
(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆனி மாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவைமகேசன்